உ

ஸ்ரீ ஞான சற்குரு வடிவேல் துணை.



# பஜனாம்ருத சங்கீத ரத்னம்

லக்ஷார்ச்சனை பாடல்களுடன் கூடியது

**PART II**

BY


**G. R. RATHNAM IYER**

Jeeyapuram


INCLUDING WITH

**AMMANGUDI LAKSCHARCHANA SONGS**

★


Printed By:

THEODORE PRINTING & LITHO WORKS

TIRUCHIRAPPALLI

**1951**



**Copy Right Registered.**

## —: குறிப்பு :—

பாம்பு கடித்துவிட்டால் விஷராஜா, எலமனூர் என்ற விலாசத்திற்குத் தந்தி கொடுத்தால் போதும். வீடுகளுக்கு வந்து சுப்ரமண்ய ஸ்வாமி பூஜை செய்ய விரும்புகிறவர்கள் இரண்டு நாள் முன்னதாகவே தெரிவிக்கவும்.

**N. B :-In case of snake bitting wire to KING OF POISON, ELAMANUR—S. I. Ry.**

## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

மகா-ள-ள-ஸ்ரீ எம். எஸ். துரைசாமி அய்யரவர்கள் முருகன் பூஜையில் இருக்கும்பொழுது முருகன் அருளினால் விபூதி ப்ரசாதம் கொடுத்து உங்கள் கேள்விகளுக்கும் பதில் சொல்லி, உங்கள் வ்யாதிகளையும் சொஸ்தப்படுத்துவார். எவ்விதக் கட்டணமும் இல்லை. நேரில் அம்மங்குடி சென்று கவனியுங்கள்.

இப்படிக்கு,

**G. R. ரத்னம்,**

...ம் S. I. Ry

அமரர் சி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
சீர்காழி.

ஸ்ரீ ஞானசத்குரு வடிவேல் துணை

# ஓர் விக்ஞாபனம்

இதனுல் பக்திமான்களுக்குத் தெரிவிப்பது என்னவென்ருல், மகா-ா-ா-ஸ்ரீ அம்மங்குடி சுப்ரமண்ய உபாஸகர் கனம் M.S துரைசாமி அய்யர் விருப்பத்திற்கேற்கவும் இன்னும் பல பக்தர்கள் விருப்பத்திற்கேற்கவும் பஜனும்ருத சங்கீத ரத்னம் இரண்டாம் பாகம் என்ற இப்புத்தகத்தை அம்மங்குடி லக்ஷக்ஷார்ச்சனைப் பாட்டுக்களுடன் வெளியிட்டுள்ளேன். இதில் ஏதேனும் அச்சுப் பிழை சொற்பிழை இருப்பின் அவைகளை க்ஷமித்து குணத்தைக் க்ரஹித்து நித்யானந்தபக்தர்களாய் பஜனம் செய்து நித்ய சாச்வ தானந்தவேல் ப்ரசாதத்தை அடையக் கோருகிறேன்.

இப்படிக்கு,

**G. R. ரத்னம்.**

---

குறிப்பு :—இப்புத்தகத்தில் உள்ள பாடல்களை யான் பரிசீலனை செய்ததில் மிகவும் ரம்யமாகவும் பாடுவதற்கு ஆனந்தகர மாகவும் இருக்கிறது.

இப்படிக்கு,

ப்ரும்மஸ்ரீ **P. K. ரகுநாத பாகவதர் அவர்கள்,**

திருச்சிராப்பள்ளி.

## — ஓர் அறிவிப்பு —

இப்பஜனம்ருத சங்கீத ரத்னம் இரண்டாம் பாகம் என்ற புத்தகம் காபிரைட் ரிஜிஸ்டர்ட் செய்யப்பட்டிருப்பதால் இப் பாடல்களை எழுதிய ஆசிரியர் தவிர வேறு எவரும் இதை அச்சிட உரிமையில்லை.

இப்படிக்கு,

**G. R. ரத்னம்.**

உ

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி துணை.

# பஜனம்ருத சங்கீத ரத்னம்

## 1. சக்தி விநாயகர் நேரிசை வெண்பா

1. பெருமையுள்ள கவிதனை பொதிகைமுனி தமிழில் இசைக்கவே
அருமையுள்ள நாவினில் வருவதற்கருள் செய்யவே—என்னுள்ள
துன்பந்தன்னை நீக்கும் முருகனுக்கு முன் உதித்த
இன்பரஸ கணபதி நின்பத மலரடி துணையே!

## 2. முருக வெண்பா

2. பாரில் இதுகாலும் பாலன் படும் கஷ்டம்
நேரில் கண்டும் நெஞ்சிளகாததார் – ஊரிலொளிர்
வேதம் திருவருட் செய்தேன் மொழிவேல் நீரெனக்கு
கீதமருட் கார்த்துத்தான்.

## 3. கலைமகள் ஸ்துதி.

அறுசீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3. ஈரேழு புவனம் போற்றும் சகலகலாவல்லி நின் பாத பத்ம
மலரைத் தொழுதேன் ஞானவேணி – நான் பாங்குடனே
பாடல் நவில என் நாவினில் விளையாடி – நற்கவிவாணர்
மெச்சும் நலமுள கவிகளருள்வாணி.

## 4. மாணிக்க விநாயகர் த்யானம்

ராகம் மோஹனம் — தாளம் ஆதி

பல்லவி

மாமலர் பாதம்தனில் பணிந்தேன் – என்
மாணிக்க விநாயகனேயுன் – மஹிமை
பெருமையறியதரமார் சொல் – மாசிலாமணி – வேதசிகாமணி
விவேக சிந்தாமணி – மனோன்மணி (மா)

அனுபல்லவி

மாதுதி பெறுதல நிகரெவரெவருந்தன்
மாதவ கருணை – நிதி பசுபதி மகிழ்

மாகுண கர்ணும் — ருத சிவமைந்தா
மாகண லோல சங் — கீதரத்னம் புகழ்
மாமறையோர் மனு — நூலா — குணசீலா
அனுகூலா — ஆதிமூல (மா)

சரணம்

வருமிடையூற் தவிர்த்தெந்தனை யாள்வாய்
அருட்பெரும் பதம் அளித்தானந்தம் கொள்வாய்
தரும்தின ஞானம் நல்வரமிதை யருள்வாய்
திருவடி சரண் ரத்னம் தீவினைவிள்வாய் — திருமுக சேவையும்
பெறும் அபிஷேகமும் — திவ்ய தர்சனமும் — தினம் தினமுன்
ஸ்துதியும் — தேவர் கொஞ்சும் நிதியும் — தயவுடன் அளிப்பாய்
தாசனுந்தன் அடிமை — நான் மறவாமலே தயாநிதி நீ — ரருள்
புரிந்திடுவீர் (மா)

## 5. விநாயகர் திருப்புகழ்

கைத்தல நிறைகனி — என்ற மெட்டு.

1. அத்புத மஹிமையுள் - மெய்ப் பொருளுனையன்றி -
அகிலத்திலினியில்லை - அன்புள் தெய்வம்.
அன்றிமுதலின்றுரை - என்றுமுந்தன் பெருமை -
இன்றும் ஜொலிக்கருமை - அறியாரார் (அத்)

2. இத்தின முனை நினைந் - தெத்தினமும் பணிந் -
தன்பொடுதுதிப்பவர்க் - கனுகூலம்.
அர்த்தமோ டளிப்பவ - கர்த்தனென் கஜமுக -
சொற்பொருளிதுதி - அருள்வாயே (அத்)

3. நித்யமுந்தன் சரணம் - முப்பழ மருந்திடும்
அப்பமொ டவல்பொரி - அளித்திட்டோம்.
தப்பிதங்களை மன்னித் - தெப்பவும் துணையிரும் -
தத்வமுன் மலர்தினம் - பணிந்திட்டோம் (அத்)

4. தர்மம் தழைக்க வருள் - தமிழ் மொழி ரத்னம் சொல் -
தந்தெப்பொழுது மருள் - விக்னேஸ்வரா.
விக்னம் தவிர்த்து நித்தம் வந்தெம் ஹ்ருதயமதில் -
வளரும் கஜமுக வினையோட்டும் (அத்)

5. பக்தர்கள் தினம் புகழ் - பவ்யமுள்கணபதி
பரஸ்பரம் உண்மையுள் - ப்ரபலாத்ம

சித்தர் மனமும் கமழ் -சத்வமரரும் மகிழ்
தத்வரத்னம் சொல்திருப் - பெருமாளே. (அத்)

6. நித்யஜெய மங்களம் - நித்ய சுபமங்களம்
நித்ய விநாயகனுன் - நித்ய மங்களம்
சக்தி-கணபதி நின் - ஜெய மங்களம் நித்யம் -
சுப மங்களம் நித்யம் - ஜெய மங்களம். (அத்)

## 6. முருகன் ஸ்துதி

(தாயுமானவர் பாடல் மெட்டு)—ராகமாலிகை

உற்ற துணை ஒருவருமில்லாமல் இந்த உலகத்தில் ஜனித்த யான் நின் திருவருளால் உனைத் தொழுதேன் - பலகாலும் நின் பக்தி மறவாதிருக்க வரந்தர வேண்டினேன் - பந்து வேறெவரும் இல்லையென்று உம்மை இன்றண்டினேன். பலபேர் வசை பொறுக்காதழுது நொந்து மனம் வாடினேன் - பாரில் உனையன்றி சதம் வேறெவர் சொல் கண்டிலேன் - பாடினேன் - ஆடினேன் - நாடினேன் - உன் பாதம் பஜித்து நான் கொண்டாடினேன் - பக்ஷமுடன் இச்சமயம் வந்திடும் எந்தனின் பக்தர்கள் சுப்ரமண்ய - பரம குருவாய் வந்த சரவண பவானந்த பழநிமா மலையாண்டவா.

## 7. ஸ்ரீ சுப்ரமண்யர் பஞ்சரத்ன ஸ்லோகம்

1. ஸ்ரீ பார்வதீட்ய ஸுகுமார முகார விந்தம்
ஸ்ரீ சோபிதம் பகுவிலாஸ கிரீட ஹாரம்
ஸ்ரீ காந்த லாளித மனோஹர பாலரூபம்
ஸ்ரீ பார்வதீ ப்ரிய குமாரமஹம் பஜாமி!

2. சுப்ரமண்ய ஜகத்பதே ஹ்ருதிவிபோலீலாவினோதாத்மகா
சுப்ரமண்ய குமாரமாரரமயத்ரம் யாத்மஸச்சித்குரோ
சுப்ரமண்ய சுரேந்த்ரஸேவ்ய சுகதம் கீர்த்திப்ரதம் சாச்வதம்.
சுப்ரமண்ய மனோகரம் கலியுகே சேவேசதாசோபிதம்.

3. சுப்ரமண்ய சதா ப்ரஸீத பகவன் சர்வஞ்ஞ விஸ்வேஸ்வரா
சுப்ரமண்ய குமார குக்குட தரம்வல்லி சமேதம் பஜே
சுப்ரமண்ய மயூரவாகன விபோ நித்யம் ப்ரஸீத ப்ரபோ
சுப்ரமண்ய நமோநமோ பகவதே—வேதாத்ம காபா ஹிமாம்!

4. சுப்ரமண்ய மனோவிலாஸவச ஸாஸ்தோத்ரம் க்ருதம் பாவனம்
சுப்ரமண்ய குகாய காமகுமாரா ஸ்ரீ பாகுலேயம் பஜே

சுப்ரமண்யருமாப்திப்ரியசுதம் நித்யம் நமஸ்தே சதா
சுப்ரமண்ய தயாநிதே ஐடிதிமேஹ்ரீம்தேஹி காமப்ரதா!

5. சுப்ரமண்ய ஷடானனம் கணபதிம் தேவம் ஹ்யுமாவல்லபம்
சுப்ரமண்ய சமேத லோகவரதம் ஸ்தோத்ரம் மயாநிர்மிதம்
சுப்ரமண்ய கடாக்ஷமேவ மநிசம் கீர்த்திப்ரதம் சாச்வதம்
சுப்ரமண்ய கலாவிலாஸஹ்ருதயே ஸ்ரீ வைபவம் நிச்சிதம்

6. ஷடானனம் கோடிதிவாகராட்யம்
ஜடாதரம் பக்தமனோவிலாஸம்
கடாதரம் சித்கனமூர்த்தி ஸேவ்யம்
ஸ்புடாத்ம முக்திப்ர ப்ருதே நமஸ்தே!

## 8. வேறு ஸ்லோகம்

1. சுப்ரமண்ய மஹாபாஹோ! பார்வதிப்ரியநந்தன!
யத்பூஜிதம் மயாதேவா! பரிபூர்ணம் ததஸ்துதே!

2. ஷடானனம் குங்குமரக்த வர்ணம் மஹாமதிம்
திவ்ய மயூரவாகனம் ருத்ரஸ்யஸூனும்
சுரசைன்யநாதம்-குகம்சதாஹம் சரணம்ப்ரபத்யே!

3. கல்யாணம் தததம்-கடாக்ஷலவதஹபக் தாயஹத்வாரிபூன்
கல்யாணசல கார்முகஸ்யதனுஜம் காருண்யபாதோநிதிம்
கல்யாணகிருதிம் அவ்யயம்
கிரிஸுதா ப்ரேமாஸ்பதம் பாவனம் கல்யாணய
பஜேனுஜம் கணபதே ஸ்ரீதேவசேனாபதிம்

4. கல்யாணகுண சம்பன்னம் கல்யாணம் பரமாதுலம்
கல்யாணி நந்தனம் ஸ்கந்தம் பக்த கல்யாணதம்பஜே

5. சதா அன்னப்ரதாதாரம்-சச்சிதானந்த விக்ரகம்
சர்வரோகஹரம்தேவம் சுப்ரமண்யமுபாஸ்மஹே!

6. சக்திஹஸ்தம் விரூபாக்ஷம் சிகிவாகம் ஷடானனம்
தாருணம் ரிபுரோகக்னம் பாவயேகுக்குடத்வஜம்
குகன் பலச்ருதி ஸ்லோகம்
ஸ்தோத்ரம் மயாகல்பிதசம்புஸூனும் பாத்ரம் சதாவேத
விதாயசத்வம் புத்ரம் பவானி ஹ்ருதி பாவயாமி
நேத்ரம் சிதாத்மாரஜிதம் குமாரம்

## 9. இராகமாலிகை

அன்புடன் ஷண்முகன் அம்மங்குடிதனில்
அத்புதம் செய்வதுரைப்பேன்—நாளும்

தென்புமிகு துரைஸ்வாமி ஹ்ருதயபூஷணனுகி
பற்பல இடர்களைந்தே—நித்தம் பாங்குடனேயாளும்
புவிஜன க்ஷேமத்தால் பூரித்து மிகக்களித்தேன்
பால் பொங்கும் மங்களம் தங்கச்சங்கு கொண்டுதும்
மால்மருகன்பால் மனமும் வைத்தேன்—ரத்னம் எங்கெங்கும்
ப்ரசித்திபோல் லக்ஷக்ஷார்ச்சன பூஜை மஹிமையதை
யானுரைக்க—நெஞ்சம் அங்கங்கிருந்து மகிழ்
ஆதி விநாயகரடைவுடன் கார்க்கத்துதித்தேன் சர்வ
அகிலஜனபரிபால ஆதிமூலனவனே அடைக்கலமாகிமதித்தேன்
அன்பரதிசயமலைப் பழநிவாசன் வேல்வள்ளிதன்
நேசன்வேல் குமரேசன் வேல்

## 10. இந்தக் கோலத்தோடு — என்ற மெட்டு

ராகம் பைரவி — தாளம் ஆதி

### பல்லவி

லக்ஷக்ஷார்ச்சன மஹிமை லேசல்ல சொல்ல
நித்தம் லக்ஷம் கண்கள்தான் வேண்டும்
காணவேண்டும் (லக்ஷ)

### அனுபல்லவி

அம்மங்குடியில் நடக்கும் அதிசயமென்ன சொல்வேன்
அன்பர்களுக்கிடு மன்னதான மென்ன சொல்வேன்
சர்வஜித்து வருஷ சகஸ்ர போஜனத்தை
ஸ்வாமி துரைஸ்வாமி செய்த சாமர்த்தியமென்ன சொல்வேன்
(லக்ஷ)

### சரணம்

1. கரியின்மே லாரோகணித்த—கண்ய முருகன் உருவ
காக்ஷிதனைக் காண கண்கள் கோடி வேண்டும்
பக்தர்கள் பாடி ஆடும் பரவசமென்ன சொல்வேன்
பாலாபிஷேகப் பரமானந்த மென்ன சொல்வேன் (லக்ஷ)
2. வருவீர் வருவீர் என்று விபூதி தரும் சப்தம்
விந்தை மிக விந்தைதான்-விஜித்ரமதை என் சொல்வேன்
மகிழ்வோர்கள் பலராச்சு—புகழ்வோர்கள் சிலராச்சு—
மகிமையுரைக்கலாச்சு மாதவரத்னம் சொல் பேச்சு (லக்ஷ)
3. சரவணபவன் செயலால்—சர்வ வியாதிகள் தீர்ந்தே
சந்தோஷமாய் வந்த சத்ஜனத்தோர்கள் பலர்

அந்தணர்கள் கூடும் ஆசார வீதியியில்
அத்புதக் கச்சேரிகள் ஆனந்தக்கதை என் சொல்வேன் (லக்ஷ)

4. பரமானந்த மென் சொல்வேன்
ப்ரும்மானந்த மென் சொல்வேன்
நித்யானந்த மென் சொல்வேன்—நேமபூஜை என் சொல்வேன்
எந்தன் முருகன் பூஜை காணக்காண ஆசை
இறைவனருள் பெறுவோர்க் கிதுவே நந்நேரம் (லக்ஷ)

### 11. காக்ஷிகண் காக்ஷியே என்ற மெட்டு

ராகம் கமாஸ் — தாளம் ஆதி

பல்லவி

க்யாதி ப்ரக்யாதியே - கண்ய லக்ஷார்ச்சனையின் (க்யாதி)

அனுபல்லவி

கண்யமுடன் திரு அம்மங்குடி துரை
ஸ்வாமி பக்தர் க்ரகத்தில் நடக்கும் நற் (க்யாதி)

சரணம்

1. கொண்டாடும் அந்தணர்கள் கூடி மலரெடுத்து - கந்தன் வெள்ளிவேல மிசை காதல் கொண்டு தொடுத்து - கண்யமுடன் பூ மழை கைகூப்பி மேல் விடுத்து - குகனவர் மேல் பொழியும் தர்சனம் காண குணம் பெருகும் பாப விமோச்சனம் - க்ருப - காருண்யமுள் பஜனப்ரயோஜனம் - கதி - தரும் - யோகயம் - கமல மலர் பாக்யம் - க்யாதி ரத்னம் வாக்யம் - குக - கெம்பீர ஸ்லாக்யம் கந்தனின் (க்யாதி)

2. ஜாதி மத பேதங்கள் எதுவுமின்றி எவர்க்கும் க்யாதி பெற மந்தரித்த வரவரிடர் தீர்க்கும் ஜோ தி ர் ம ய முருகன் தாயத்தைக் கட்டிக்கொடுக்கும் - துரைஸ்வாமி ஐயரவர் பெருந் தன்மை சொல்வேன் - உலகிலடைந்தோர் கோடிப்பேர் நன்மை - உற்றது சொன்னால் உனக்கேன் நெஞ்சே வன்மை - எவர்க்கும் - நரகின்மை இதுசமயம் நேர்மை - எகுக மனத் தூய்மையாருகமையும் வாய்மை கந்தனின் (க்யாதி)

### 12. செந்தமிழுலகினில்—என்ற மெட்டு

1. லக்ஷார்ச்சன பூஜையின் லக்ஷ்மீகரத்தைக் காண
லக்ஷம் கண்கள்தான் வேண்டும்

காண வேண்டும் லக்ஷம் கண்கள்தான் வேண்டும்
காற்றுள்ள போழ்தே தூற்றிக்கொள்வோம் நாம்
கடுகெனவே அம்மங்குடி சென்று
க்யாதி துரைஸ்வாமி கையாலே - விபூதி வாங்கி
கவலைகளெல்லாம் தீர்ப்போமே. (லக்ஷ)

2. இச்சமயம் விட்டால் எச்சமயம் வாய்க்குமோ
எனக்குத் தெரியாது கேளும் இதற்கென செய்வேன்
எதற்கு மஞ்சாதே நாம் நாளும் தஞ்சமென்று கந்தன் அடி
தனைப் பணிவோம் வஞ்சமனைத்தையும் விட்டிடுவோமினி
வகையொன்றுமில்லை ஐயன்மீர் - வையத்திலே
வடிவேலனைச் சரண்செய்வோம். (லக்ஷ)

3. பில்லி பைசாசம் பித்து - பறந்திடும் காத்துச் சேஷ்டை
பக்தர் துரைஸ்வாமி திருக்கையால் - விபூதி வாங்க
பார்பிணி ஏவல்கள் தீரும் - பண்புடனிது சமயம் சமயம செல்
பார்த்த வரவரிடர் தீர்த்திடவே சொல்
பாக்ய சங்கீத ரத்னம் வேல் - ப்ரகாசிக்குமே ஸ்லாக்யம்
வேறெங்குமில்லையே. (லக்ஷ)

4. அந்தணர் வேதமோதும் அதிசயமென்ன சொல்வேன்
அன்னதான மஹிமையே மஹிமை
அதன்பெருமை அளவிட நம்மாலாகுமோ
அன்புடன் தங்கத்திலும் வெள்ளியிலும்
அவரவர் தாய்த்துக்கள் கட்டிக்கொண்டால் ஆனந்தம்
மிகப் பொங்குமே அடைவோம் தினப்பெருமைதான்
புவி எங்குமே—(லக்ஷ)

5. மல்லிகை முல்லைரோஜா-மரிக்கொழுந்து வெட்டிவேர்
செண்பக பாரிஜாதமாம்-மலர்கள் தூவி
மஹிமை ஷண்முகார்க்கர்ச்சனை மஹத்வமுடன்
செய்வதானந்தக்காக்ஷி—மஹிமையதையுரைக்க ரத்னம்சாக்ஷி
வேறென்னவேண்டும் ஐயன்மீர்-விமரிசையாய்
விரைவினில் சென்று காணுவீர்—(லக்ஷ)

6. அவரவர் இடர்தீர்ந்து ஆனந்தமதைக்கொள்ளும்
அற்புதம் வேறென்ன சொல்வேன்-அனுபோகத்தால்
அறிந்ததை யானும் செப்பினேன்
அன்புடனெந்தன் குற்றங்குறைகளை
மன்னித்தாட்கொள்ளவேணும் முருகன்

அடியவர்க்கருள் ஷண்முகன் அவரையன்றி
அகிலத்தோர்க்காரும் துணையுண்டோ—(லக்ஷ)

## 13. ராகம் சங்கராபரணம் — தாளம் ஆதி

1. லக்ஷக்ஷார்ச்சன பூஜையதின் விமரிசை என் சொல்வேன்
லக்ஷக்ஷம்கண்கள் தான்வேண்டும் காண
வேல்பால் மகிழ்கொள்வேன்—(லக்ஷ)

2. சர்வஜித்து வருஷம் தன்னில்-சாத்வீக மணிஐயர்
சந்தோஷமாய் லெக்ஷக்ஷார்ச்சனே செய்தே மகிழெய்தார்
ஸ்வாமி சிவஸ்வாமி துரைஸ்வாமி அருள்பெறவே
சத்வகுணச்ரத்தையுடன் ஷண்முகனைப் பணிந்தார்—(லக்ஷ)

3. மறையோருண்ட உச்சிஷ்டத்தில் உருண்டே பக்தி மிஞ்ச
மதுரமணிக்கீடாரென்று மறையோர் மனங்கொஞ்ச
மாநிலத்திலுள்ளோரெல்லாம் முருகன் அடிபணிந்தார்
மஹிமையுற லக்ஷார்ச்சனே செய்வதெனத் துணிந்தார் (லக்ஷ)

4. கலியுகத்தில் கண்யமுடன் - கந்தனை நாம் புகழ்ந்தால்
கஷ்டங்களெல்லாம் தீர்த்தவர் - கருணை மிகப் புரிவார்
காத்துச் சேஷ்டை பித்து பைத்யம் - கவலையின்றி ஓட்டும்
க்யாதி துரைஸ்வாமி தொழும் குகனை நிலை நாட்டும் (லக்ஷ)

5. ரோகப்பிணி தீர்க்கும் தெய்வம் - தெய்வானையின் முருகன்
போகாப்பிணி போக்கும் தெய்வம் - பக்தர் புகழ் முருகன்
கலியுகத்தில் கந்தனல்லால் வேறேதுண்டு தெய்வம்
காக்ஷிதரும் தெய்வம் - ரத்னம் சாக்ஷி நித்ய தெய்வம் (லக்ஷ)

6. கேட்கும் வரம் அளிக்கும் தெய்வம் கந்தன் வள்ளி தெய்வம்
பார்க்குள் புகழ் அளிக்கும் தெய்வம் - பக்தர் புகழ் தெய்வம்
சேர்க்கும் பல மலர்மாரியால் மகிழ்ச்சிகொள்ளும் தெய்வம்
மகிமையுள்ள தெய்வம் நித்ய - மாநிலத்தோர் தெய்வம் (லக்ஷ

7. பழநிமலைமேவிருக்கும் - பாலசுப்ரமண்யன் )
பக்தர்களுக்கருள் ஷண்முகன் பார்கோடி லாவண்யன்
காலமறிந் தெவர்க்கும்சுகக் காக்ஷிதரும் கண்யன்
நீதரத்னம் உளமறிந்து கிருபைசெய் நித்யபுண்யன் (லக்ஷ)

8. ஆடும் மயில் ஏறும் தெய்வம் - ஆறுமுகத் தெய்வம்
அப்பனுக்கு உபதேசித்த அம்பாள் பெற்ற தெய்வம்
அன்னை உமைமகிழும் நித்ய அருந்தவச்சேய் முருகன்
அன்னவரின் ஈடெவரோ ஆதிலக்ஷ்மி மருகன் (லக்ஷ)

9. விஷக்கடிகள் தீர்க்கும் தெய்வம் - வித்வரத்னம் தெய்வம்
வேதவேதாந்த தெய்வம் - வேலாயுத தெய்வம்
சர்வசக்தி தெய்வம் நித்ய - சமரஸம் தரும் தெய்வம்
சாச்வத தெய்வம் நித்ய செந்தூர் வளர் தெய்வம் (லக்ஷ)

10. காவடிகள் தூக்கும் தெய்வம் - கண்டோர் மகிழ் தெய்வம்
காக்ஷி தரும் தெய்வம் நித்ய கோலாகல தெய்வம்
ஞானமருள் தெய்வம் நித்யமான பொருள் தெய்வம்
த்யானரத்னம் தெய்வம் சத்யமானோர் துணை தெய்வம் (லக்ஷ)

## 14. ராகம் சேஞ்சுருட்டி — தாளம் ஆதி

பல்லவி

1. அம்மங்குடிதனில் நடக்கும் முருகன் லக்ஷக்ஷார்ச்சன பூஜை
அதன் விமரிசை என்ன சொல்வேன் எப்போதும்
பார்க்கப் பார்க்க ஆசை (எவர்க்கும் பார்க்கப் பார்க்க ஆசை)
(அம்)

2. வந்தவர் வல்வினை களைந்திடும் ஷண்முகன் வைபோகக் காக்ஷி
விலை மதிக்கவொண்ணாது - ப்ரும்மானந்தமானந்தம்
[வேல் முருகன் சாக்ஷி (அம்)

3. அதிதிகளவரவர் உண்டுகளிக்கும் நித்ய அன்னதான
[மஹிமை - அதை
ஆதிசேஷனும் சொல்லமிகருமை - ஆறுமுகன் பெருமை
(அம்)

4. அன்புமிகு துரைஸ்வாமி பக்தர் ஹ்ருதயானந்தமதில் வளர்ந்தே
குகன் அவரவர்க்குற்ற பேய் பிணி களைந்தே நித்யம்
ஆனந்தமது புரிந்தே (அம்)

5. சர்வஜாதி செந்தாமரை ரோஜா சம்பங்கியுடனே - இன்னம்
வாசமலர் வாடாமல்லி ஜெவந்தி - வெட்டிவேர்களுடனே
(அம்)

6. ஆண்டவரவர் பெருமை அறிவாரெவர் - ஆனந்தமென்ன
[சொல்வேன் - அதை
அடைவதற்கெவரெவர் பாக்யம் செய்தவரோ அவர்பால்
[மகிழ் கொள்வேன் (அம்)

7. காற்றுள்ளபோழ்தே - தூற்றிக்கொள்வர் அறிவாளிகளவர்
[தானே - கண்ய

ஸ்ரீ சுப்ரமண்யுனருள் பெற்றோர் என்றும் - கவலை
[விட்டவர்தானே (அம்)

8. நீராப்பிணிகளைந்தெவர்க்கும் சுகம்தரும் சந்தானபாக்யம்
ஜெகப்ரசித்தியாம் ரத்னம் புகழும் ச்லாக்யம்
சாச்வதநல் வாக்யம் (அம்)

9. ராகசுரலய தாளம் ருதங்கவைபோக மோகசுந்த்ரம் - மிக
ரம்யபஜன சுஜனுனந்த நிரந்திரம் ரக்ஷிக்கும் மந்த்ரம் (அம்)

10. க்யாதியெங்கும் ப்ரக்யாதி கலியுக வேலர்க்கு நித்யமங்களம்
குறமோகன் நித்யமயில்வாகன் வள்ளி
மணவாளர்க்கு ஜெயமங்களம் (அம்)

## 15. அலகல்ல என்ற மெட்டு

ராகம் மத்யமாவதி — தாளம் ரூபகம்

பல்லவி

நித்யஸ்ரீ நித்யமங்களம் - ஜெயமங்களம் சுபமங்களம் (நித்)

அனுபல்லவி

தருணம் வேலர்க்கு மங்களம் - வள்ளி
தெய்வானை மணாளர்க்கு (நித்)

சரணம்

1. அனுதினம் நுதிசரவணர்க்கு-அந்தரங்க ஆறுமுகர்க்கு
விந்தைமுக கந்தையர்க்கு விதரண ரத்னம் வேலர்க்கு (நித்)

## 16. இராகமாலிகை

மாறுதன்பக்தியும் சக்தியும்தாரும்நீர் முக்தி ஞானப்பண்டிதா
கோராமலிவ்வரம் தாராமலென்புத்தி நேராகச்செய்யுன்கடன்
பூருவும் உன் செயல் புகலவோமுடியாது ரக்ஷிதிருவடி தஞ்சம்
வாராமலென்னுயிர் தரியுமாதிறமேது [ஆள்
தத்வகுகதெய்வானைவேல் சீராகவந்தருள் சித்தமிசைகுடி
கொண்ட சிங்காரச் சிலம்பநீதா - வேறுக உன்மனம்
எண்ணற்கமைந்தனுன் மறவாத அடிமைநாளும்
காராமல் நீரெனைக்கார்த்திடவேறெவர் கருணைதானில்லையோ
சொல் கூருகவாள்கொண்டு வேல்கொண்டுறுப்பினும்
மாறுமயக்க மனமே - பாராதிடர் திடர் தீராத் துயர் தவிர்
தென்பரங் கிரிவாஸனே - ஹ்ருதய தத்வசுக புரிபூரணானந்த
வெள்ளமே - தென் பழநிமலை யாண்டவா

17. ஆராரென்னை அலைக்கழிந்துமென்னறிவவாளறக்கவசமோ
வடிவேல் - தீராத துன்பமதை தீர்த்திடும் வேலவா
திருவருட் தாரும் முருகா
வாராத இன்பமும் வந்தளித்தாலுமென்
வஞ்சமிலாமலஞ்சேல்
பாராதகன் மனம் பக்தியுண்டாசையாய்
புகழுமே மகிழுமே பால் மாருத சேய் தனம்
தாயை மறக்குமோ மங்கள மணாள வள்ளி - வீர கெம்பீர
ஸ்ருங்கார லங்காராதி தீரப்ரதாப வடிவேல் -
மார்பா ஒய்யாரா நல்சூர சம்ஹாரா சீர்காராம லாரினிமேல்
கூறவார் தரமாகும் ஏதினி ஜெகமெங்கும்
கூர்வடிவேல் முருகா -
கர்த்தனே கருணைப்ரவாக வடிவேலவா
கந்தனே சுப்ரமண்யா - ஹ்ருதய தத்வ சுக பரிபூரணானந்த
வெள்ளமே தென்பழநி மலையாண்டவா

18. திருமகள் மருமக மலைமகள் முருகவென் கலியுக வரப்ரசாதா
கனகமணி தெய்வமே கார்த்திகைக் குமரனே
கமலமுக பவளவாயா காரினியுன் பாரம் கேளினி நல்சாரம்
பாரினில் வேறுமுண்டோ தேறினியுபசாரம்
ஆயிர நமஸ்காரம் அன்பு செந்தில் ஆண்டவா
துதி கரா துன்பம் தீர் சரவண விதரண
மதுரி தகண ஜெயமா
மயிலமர் விகசித வாகனறுமுகா
வந்தியுமுன் தர்சனம்
கதிவிதி மதி மாது குறமகளதிபதி
ஷண்முகானந்த பவனே - என்
சித்தமதிலுரை நடன பசுபதி பாலகா ரகுபதி மருகவேள் வா
வடிவேலா சுசீலா நற்கோலாகலா ஞான கெம்பீர சிங்காரனே
ஜெகநித்யச் சுடர்வேல நவரஸ மயிலாடும்
தென்பழநிமலை யாண்டவா

19. செந்தில்மாநகரம் கதிர்காமம் தன்னிலும்
சேர்ந்ததிருத்தணிகையதிலும் சிங்காரமாயமர்ந்
தென்னுளுமிருக்கின்ற திருவாவினன்குடியிலும்
திருப்பதி திருவேரகம் ஸ்வாமிமலையிலும் திருப்பரங்
குன்றத்திலும்-திருவலம் திருக்கச்சூர்-திருக்கழுக்குன்றமும்
திருவாதி வயலூரிலும் திருப்போரூர்தன்னிலும்

தேர்திருவையாற்றிலும் திருச்செந்தூர் திருப்பழநியும்
திருச்சுருளி திருக்காஞ்சி திருஎட்டிக்குடியிலும்
திருக்குமரகோட்டமதிலும் திருமைலம் திருச்சிக்கல்
திருக்குன்றகுடியிலும் திருஐயம்பாளையத்தும்
திருபேட்டைவாய்த்தலை திருஉடுப்பிதன்னிலும்
திருச்செந்துறைதன்னிலும் திவ்யமயமாகி வேல்நீர்
இருக்கும் ஸ்தலங்கள் எத்தனையெனச் சொல்லுவேன் ஹ்ருதய
தத்வசுகபரிபூரணானந்த வெள்ளமேதென் பழநிமலையாண்டவா

20. சென்னிமலை விராலிமலை ஸ்வாமிமலை தன்னிலும்
சேர்ந்தவான் தோகைமலையும்-ஐயர் திருவேங்கிமலை
கொச்சிமலை குடகுமலை ஆனைபொள்ளாச்சிமலையும்
பச்சைமலை பவளமலை பரமேசன் வாழும்மலை
பாங்கான கொல்லிமலையும்-பழநிமலை கழுகுமலை
பார்புகழண்ணாமலையும் பக்தர் தாந்தோணிமலையும்
வெள்ளிமலை தங்கமலை வீரமலை வைரமலை
வாதவைராக்யமலையும் மேருகிரிதன்னிலும்
மஹிமை கைலாயகிரி மந்த்ரகிரிதன்னிலும்
மாணிக்ககிரியிலும் மகிழிமையகிரியிலும் மாசிவஸ்தல
கிரியிலும் கந்தகிரியான நவரத்னகிரிதன்னிலும்
க்யாதி கருணைகிரியிலும் விந்தியகிரிதன்னிலும்
வித்வகிரிதன்னிலும் வேதாத்மகிரிதன்னிலும்
வேல்விளையாடும் விமரிசை என்னென்று
சொல்லுவேன் என் பழநிமலை யாண்டவா

21. பாலாபிஷேக னென் பக்தர்க் கிருப்பிடம் பழநிமலை பால
வடிவேல் உன் பெருமை மஹிமை புகல அருமை அடிமை
யானும் அன்புடனிருந்தும் நாவால் உன் புகழ் பெருக மகிழ்
தருக புண்ய மயிலேற் வருக வள்ளி மணவாளனே வா வேல்
பக்ஷமுடனிச்சமயம் இச்சையுடன் எழைக்கிரங்கி புன்மன
மிளகிக் கார் ஹே பாவலர்களுபகார ஸ்ருங்காரலங்கிருத
சங்கீத கெம்பீரனே-பக்தர் பஜி சுப்ரமண்யனே பரமகுருஷண்
முகா ப்ரபல ரத்னம்ருத வேல் வடிவேலா சுசீலா நற்கோலா
கலா ஞான கெம்பீர சிங்காரனே - ஜெகநித்யச் சுடர் வேல
நவரஸ மயிலாடும் தென் பழநி மலையாண்டவா

22. பன்னிருகை வேலனே வள்ளி மணவாளனே பரம க்ருபை
புரி ஷண்முகம் நல் பக்தர்க் கருள் குகன் சித்தர்க்கிரங்கிடும்

சக்தி வடிவேல் முருகன் என் பண்டார தேசிகன் தண்டாமரைமுகன் பவள அதராம்ருதமுள் - இப் பார் புகழ் செவ்வாயும் பகலொளி புன்னகையும் பூத்தாடும் கொடிச் சேவலும் பொற் பாவையர் ப்ரமிக்கின்ற த்ரேகமும் பாதமும் ரூபமும் லாவண்யமும் இன்று பகரவோ நாவரிது பாவலர்க ளுபகாரப் பசுந்தோகை மயில் வாகனக் கடவுளிவர் கலியுக வாதவே லென்றென்றும் காக்ஷி தரும் நித்ய தெய்வம் வேறு காணவும் முடியாது இது சத்யம் இது சத்யம் இவரன்றி ஒருவரில்லை.

23. மாசிலா நவரத்ன மணி மகுட ஸ்ருங்கார மங்கள மனோஹர வேல் ஹேற மன்னுயிர் தோழனே மதி சந்த்ரஹாஸ முகமந்த்ர ப்ரணவ குருவேல் என்றும் மஹிமை கடகமணி குண்டல கேயூர மார்பணி கனக மயில்வேல் - நல்மாணிக்கம் முத்து பவழம் பச்சைத் தாழ்வட மாலைகள் அணிந்த வடிவேல் - மஹாமாதவ கோமேதக புஷ்பராக வைடூர்யக்கல் நீலவைரம் ஜோதி மின்னல்போல் ஒளிவீசும் பதக்கமணி சுந்திரம் பக்தர் பஜிவேல் சுதந்த்ரம் நிரந்தரபாவலர்க ளுபகார நாவலர்கள் ஸ்ருங்கார காவலர்கன் கெம்பீரனே ரத்னகோல மயிலேறி வரும் நீலமயில் வாகன குறவள்ளி மோகன கார்.

24. இடையூர்களைத் தவிர் தடையோர்களையுதிர் தர்மபரிபால னூர்த்த நல் இடையோர்கள் குலத்துதி இன்ப கோபாலன்தன் அன்பான ஆதி மருகா - வீண் படையோடு வந்தெதிர் பதித ரைத் தானுதிர் பக்ஷமுள் பாலமுருகா - அக்கடையோர்களான துஷ்டறிவற்றவர்களை க்யாதி வடிவேல் ஷண்முகா - திவ்ய மடை திறந்தேனோட அபிஷேக பாலதில் அடைவுடன் நீராடும் குமரா - நித்யக் கொடையாருன் இணையார் கை வினைதீர் என் குறவள்ளி வேல் மோகனா - சரவண லோக குடை நீரின்றடைவாயாள் குற்றமில் கொற்றவர் ஞான கலியுக வரதா - கண்ய இடைவேற் கண்மணி வள்ளி நடை மாமயில் வேல ஜடை கங்காதரன் கந்தனே.

25. பாராளும் வேலனே பாவிபடும் பழிப்பெலாம் பகர்வதும் பார்க்கவில்லையோ - பண்புடன் ஷண்முகா பழநியங்கிரியிலே பதமுடன் படுத்திருந்தால் பூலோகமிதிலெந்தன் குறை கேட்க இனியாவர் பக்ஷமும் பறந்ததென்ன என் பாபங்க ளோடச் செய் பக்ஷமென்பதுமின்றி பாராதிருக்கலாமா

பூவையர் சங்கீதனே ரத்னனுட வேதனே பாதமருள் விளையாடிவா - ததிவர்ண மயிலேறி தினம் தர்மமுடனே நம்பும் பக்தனென்னை ரக்ஷிக்க வா வடிவேலா சுசீலா நற் கோலாகலா ஞானகெம்பீர சிங்காரனே ஜெகநித்யச் சுடர் வேலா நவரஸ மயிலாடும் தென் பழநிமலையாண்டவா.

26. ஈராறு செவியிலே யான் புகல் சொல்லெலாம் எளிதினில் ஏற்கவில்லையோ இத்தருணம் புவியிலே யான்படு மவஸ்தையை கடுகளவும் கேட்கவில்லையோ நித்ய கலியுக வரத வேல் கர்த்தன் நீராகியும் கடைக்கண்கள் திறக்கவாதோ இன்று கண்ய மின்றி யான் கத்தும் கோபமா பாபமா தாபமா சொல் லப்பனே தினைகானக் குறவள்ளி லோலனே சீலனே தெய்வானை மகிழ்வேலனே தவசுப்பையனே பழநி முத்தை யனே சிவ மைந்தனே கந்தையனே மடமயில் வாகனு நித்ய குற மோகனு வள்ளி குக்குட த்வஜகாரணு கோர அதரகுல காலனே ஆனந்த மூலனே அப்பனே என் ஆண்டவா.

27. பாராமல் என்மனம் பதறுது பக்தியாய் பாரபக்ஷமேதுமக்கே சொல் பக்ஷமுடன் பார்புகழ் சரவண பவ குக பரபரப்புடன் வல்லையா நீர் தாராமலெவர் துணை தருக வேல் தேவனுன் தஞ்சம் நான் நெஞ்சம் கொண்டேன் சேவை - தந்திடா வஞ்சமும் செய்வதேன் எந்தன் மேல் தயவென்பதுமக் கில்லையா இன்று வாராமல் வாதுமேன் வம்புகள் தானுமேன் வகை எனக்கோதப்பனே நீரும் காராமல் கதியில்லை கருத்தென் பதில்லையோ கவலை என் கர்ம வினையோ மனமாறுமலாற்றிட அருமருந்துமையன்றி யார் கொடுப்பார் ஐயனே அருள் நித்யச்சுடர் வேலநவரஸ மயிலாடும் தென்பழநிமலையாண்டவா

28. ஆதார முனையன்றி அகிலமிதிலாருளர் தாமதமுமேதப்பனே கேளுன் காதார யான் புகல குறையெலாமகற்றுவாய் வாத மது மேதப்பனே உன் - பாதாரவிந்தமே பரம வேதாந்த மென்றெண்ணியும் கந்தப்பனே இன்னம் போதாத காலமோ எந்தனுக்குரைத்திடும் எப்பொழுது வழி சொல்லுவாய் இனி ஆகாது இஜ்ஜென்ம உடற் பொருள் ஆவியும் அற்பணம் உந்தனுக்கே மனம் நோகாது மைந்தனை நொந்திடும் உந்தனுக் கீராறு கண்களில்லையோ வரவும் போதாக நெஞ்சமும் சஞ்சல முமே கொண்டுன் சேவை காணுவாடினேன் ஜெகநித்யச்சுடர் வேலநவரஸமயிலாடும் தென் பழநிமலை யாண்டவா.

29. ஊரான ஊரிதில் உற்றதுணையாவரென் உறவான குற மோகனே இந்த பூமியில் ஒருவரும் நிலை நிற்பதில்லையே உடலிதும் சதமில்லையே இவ்வுலகத்தில் சொந்தமாய் ஒன்றுமே இடையாது நித்யசதம் நீரொருவர் வேல்பூர்வம் நற்றவம் பண்ணிட நரமானிடக்காயம் நீர்தரலாச்சுதையா இதை கற்றவர் அறிவார்கள் பகுத்தறிவில்லையோ கடவுள் நீர் கொடுத்திருக்க இக்காலமும் தாமதம் செய்திடாதுந்தன் தாள் பற்றினேன் தஞ்சமனேன் ததிதமியனென்னை யாளுன் திருவடி தாஸன் நான் தப்பிதம் மன்னித்திடும் ஹ்ருதயதத்வசுக பரிபூரணனந்த வெள்ளமே தென் பழனிமலை யாண்டவா.

30. முருகனுன் கடாக்ஷமுண்டானல் எவர்க்கும் முடியாத கார்யம் முடியும்-அவர் உரைக்கும் மொழி பிசகேனும் உற்றமொழியாகிப் பின் உகந்தவாறெதுவும் நடக்கும் கெட்ட இடர்பாதை செல்லினும் நற்பாதையாக்கி வேல் நாகிலத்தோர்க்கு தவுவாய் பக்தர் கோராமல் தனதான்ய சம்பத்துக்கள் தந்து கொஞ்சி விளையாடுவாய் என்றும் சேராத நண்பர் தனவந்தர் பகையாளிகள் சேர்த்து நீ உறவு செய்வாய் இஷ்டர் போராத காலத்தை புண்ய சுசமாக்கியே பெருங்கீர்த்திதான் அடைவாய் எந்தன் புண்யனே ஸ்ரீசுப்ரமண்யனே உன்பெருமை ஏன்னென்று நான் சொல்லுவேன் ஹ்ருதயதத்வ சுகபரிபூரணனந்த வெள்ளமே தென் பழனிமலை யாண்டவா.

31. தானேகும் வழிக்கு நல் தர்மமும் தான்செய்ய தடையுமுண்டோ சொல்லுவாய் - இத்தாரணி ஈரேழ் பதினன்கு லோக ஏகாதிபத்யக் கந்தவேல் - நீர் என்றுமே உந்தனை நம்பி நான் அண்டினேன் என் ஹ்ருதயகமலவாஸா நித்யம் என் குறை தீர்த்திடும் இகபரம் அளித்திடும் இன்பகோபாலன் மருகா பக்தி வ்யர்த்தமாய் போகாமல் எந்தனுக்கு வரம் அர்த்தமுடனருள வருவாய் விரக்தி அகிலமிதில் ஆதிவடிவேலன் நீர் துணையல்லால் ஆதரிப்பாரும் உண்டோ - சித்தர் அன்பரனுகூலனே இன்பவள்ளிலோலனே இனியேதுமறிகிலேனே எந்தன் ஹ்ருதய கல்யாணகுண பரிபூரணனந்த தென்பழநிமலை யாண்டவா.

32. அகில பூஜனங்களின் அன்பான வேலனே அப்பனே அருள வருவாய் என் ஐயனே துய்யனே மெய்யனே ரத்னஸங்கீத சுக சுப்பையனே மதுரிதகணஜெயவிதரண அறுமுக சரவண குக

ஷண்முக என் அனுதின பூஜன பஜனவினோதனே ஆனந்த ஸாகரனே நித்யகுண பக்த காருண்ய லாவண்ய தீரனே தென்பழநி குமரையனே வர்ணதோகை மாமயிலேறி வாகுடன் அமர்ந்து குற வள்ளி தெய்வானையோடு ததிவாரு மிச்சமயமே வகை எனக்கோதுமே வடிவேல் ஸ்ரீ சுப்ரமண்யா - நல் தீன சரண்யனே திவ்யப்ரகாசனே தென் பழநிமலை யாண்டவா.

33. தேவர்களும் வேதியரும் நின்பஜனம் நித்யம் செய்ய வித் பன்ன வாத்ய சகிதம் - கேளும் - ராகதாளக்ஞானத்யானநி மோகசுர சங்கீத சாமர்த்தியமும் - நாளும் - அன்பான குயில் கூவும் தென் பழநி மலைமேவும்| அதிசயக் காவடிகளும்-ஆளும் - இன்பான வள்ளி தெய்வானை மணவாளனுமக்கேற்ற பஞ் சாம்ருதமும் - பாலும் - அபிஷேகமாகி நீரருந்திக் களிக்கும் நித்யானந்த வைபோகமும் - மாலும் - அயனும் சிவனும் கண்டு அவரவர்கள் பத்னியுடன் ஆச்சர்யப்படும் கோலமும் - வேலும் - கைதனில் ஊன்றியே வீரமுடன் மயிலேறி விளை யாடும் விமர்சைதானும் ரத்னம் என்னென்று சொல்லுவேன் ஏதென்று வர்ணிப்பேன் என் பழநிமலை யாண்டவா.

### 34. ராகம் கல்யாணி - தாளம் ஆதி

பல்லவி

பாராமுகம் ஏன் ஐயா - பன்னிருகையா (பாரா)

அனுபல்லவி

நேராயருட் செய்யும் மயூரா மயில் அமரும் வீராமலைப் பழனி தீரா திவ்ய லாவண்ய - திருவருளனதடி தான் கதியென ததி தமிழ் சுவை ரஸத்தேன் இதைப் பொழிந்தடைக்கலம் இதுசமயம் ரத்னம் சொல் அம்ருதம் உண்டு களிக்கும் உபாயா உத்தமர்கள் சகாயா உட்சந்தேக விதாயா உண்மையில் நித்தம் (பாரா)

சரணம்

1. வேலா குறவள்ளி மணாளா மலைப்பழநி லோலா எந்தன் தீன தயாளா தயை செய் இன்னம் (பாரா)

2. வாரும் வரந்தந்தென் சொல்காரும் கிருபைக் கடைக்கண் பாரும் என் தீவினைகள் தீரும் - தீன சரண்ய (பாரா)

## 35. ஸ்ரீகாமாக்ஷி பஞ்சரத்ன ஸ்லோகம்

1. சத்ய தர்மாத்மிகே தேவி - நித்யானந்த ஸ்வரூபிணி
முக்தி மார்க்கப்ரதே தேவி - காமாக்ஷிஸ்ரீ நமோஸ்துதே
2. வித்யாம்தேஹி பலம்தேஹி - பார்யாம்த்ரை லோக்யசுந்தரீம்
சத்புத்திம் தேஹிமே தேவி - காமாக்ஷிஸ்ரீ நமோஸ்துதே
3. ஆயுராரோக்யமை ஸ்வர்யம் - காயசித்தி ப்ரதேசிவே
மாயாமானுஷ லோகாட்யே - காமாக்ஷிஸ்ரீ நமோஸ்துதே
4. ஞானமுக்தி ப்ரதேதேவி - மானஸானந்த காரிணி
ஆனந்தசின்மயி தேவி - காமாக்ஷிஸ்ரீ நமோஸ்துதே
5. தர்மார்தகாம மோக்ஷார்த்தம் - சின்மயி தவஸேவயா
நிர்மலேதேஹிமே நித்யே - காமாக்ஷிஸ்ரீ நமோஸ்துதே
6. யத்பஞ்சமிதம் ஸ்தோத்ரம் - யத்படேத் பத்திமான்னரா
சத்புத்ரலாபம் ஐஸ்வர்யம் - தத்பவேத்இக ஜன்மனி

## 36. காண கண்கோடி என்ற மெட்டு

ராகம் காம்போதி — தாளம் ஆதி

பல்லவி

தாயேநின் துணையல்லால் தமியனுக்கெவருளர் (தா)

அனுபல்லவி

சகல ஜீவஹ்ருதய-சஞ்சாரிணி சாரணி - மதுராபுரி வாஸினி
மீனாக்ஷி மனமோஹினி - வேத ஸாஸ்த்ரஹிதி - ஹாஸபுராண
ஆகம சூஸ்த்ரதத்வப்ரகாசினி சுமதி-பகவதி குஸுமாவதி-நிதி
பார்வதி-பரமேஸ்வரி சங்கரி (தா)

சரணம்

ஸகல ஜீவரக்ஷணி-சுந்தரி ஜெகத் ஜனனீ - ரமணி கமலினிமதி
வதனி நளினலோசனி-காஞ்சியில் வாழும் அம்பா - காமேஸ்வரி
ஜெகதம்பா தத்வநித்யத்புத - தாயே மீனலோசனி தீனதயாபரி
திவ்யஸ்வரூபிணி திருவடி சரண் ரத்னம் - ஸ்தோத்ர
மநோன்மணி - வேதநாயகி வேதவதி ஸ்ரீ - ராஜ
ராஜ ராஜேஸ்வரி (தா)

## 37. வாசாமகோசரம் என்ற மெட்டு

ராகம் அடாணு — தாளம் ஆதி

### பல்லவி

ஈஸ்வரி பார்வதி-பரமேஸ்வரி-ஸ்ரீசங்கரி-ஜெகத் ஜனனி
சிவகாமி சுகுணவதி-சரணிதுததி அம்பா (ஈஸ்)

### அனுபல்லவி

பார்புகழ் பகவதி - மந்தஹாஸமுகமுள் - மதிவதனி சுந்தரி
மங்களாங்கி மனோஹரி-பத்மாவதி பக்தர் - சித்தர்ப்ரபலாகம
பூஜிதசரணி - புவனிதன் ஜெகத் ஜாலினி - கமலலோசனி
கல்யாணி - கனவிதரண குணபரிபூரணி புவிஜனகாரிணி
புண்யஸ்தல வாஸினி (ஈஸ்)

### சரணம்

குவலய ஜனஸ்ரீ பரிபாலினி குணமணி ரத்னம் சொல் நித்ய
மனோன்மணி கதியாரிணி காஞ்சியுள் - காமாக்ஷி குணபூஷணி
மஹாகாளி பைரவி - மாமறையோர் புகழ் மந்த்ரரூபிணி
ஓம்காரி ஸ்ருங்காரி சுகுணவதி வேதநாயகி - வித்வான்கள்
புகழ்ந்திடும் விமரிசைத்யான - சங்கீதலங்க்ருத ஜனனி
நதஜன பரிபாலினி மனமோஹினி மதுராபுரி சிவசங்கரி
ஸ்ருதஜனரக்ஷகி ஸ்ரீராஜராஜேஸ்வரி-ரக்ஷி பரமேஸ்வரி (ஈஸ்)

### நவக்ரக ஸ்லோகம்

சூர்யம் சோமம்ச பௌமஞ்ச சௌம்யம் ராஜம் குரும்ப்ருகும்
ஸ்திரம் ராகும் சகேதும்ச ஸ்தோத்ரம் நித்யம் நவக்ரகம்
ஸ்தோத்ரம் மயாக்ருதம் புண்யம் ஸ்தோத்ரம் சர்வ மனோரதம்
ஸ்தோத்ரம் பவேத் மனுஷ்யாணும் க்ரக ப்ரீதி விவர்த்தனம்

### நந்திகேசர் ஸ்லோகம்

நந்திகேச மஹாபாஹோ இந்துசூடப் ப்ரியோத்தமா
வந்தேஹம் தவ பாதாப்ஜம் நந்திகேசோ ப்ரஸீதமே.

### சண்டிகேசர் ஸ்லோகம்

சண்டிகேச தயாஸிந்தோ சண்டிகாதேவி வல்லபா
சண்டப்ரசண்ட பூதாத்மா சண்டிகேசம் நமாம்யஹம்

## ஸ்ரீவேதமூர்த்தி பாகவதர் கவி — ஸ்லோகம்

1. ராமரத்ன குணே விப்ரா சோம சூர்யாத்ம பாஸ்வரா
ரமாராம ருமாசக்தி ராமரத்னம் ப்ரகாச்யதே
ஜீயாக்ரஹார விப்ராணும் ச்ரேஷ்டம் ஜீயபுரேவஸெள
ராமரத்னம்ச சர்மாணும் ராமம் தர்மம் ப்ரகாச்யதே
ராமரத்னம் கவிஸ்ரேஷ்டம் ராமம் நித்யஸ்து மங்களம்
ரத்னம் லோகப்ரகாசஞ்சா ராமரத்னம் ப்ரகீர்த்திதே.

2. ஸ்ரீ ராமரத்னம் ரமணீய ரத்னம் ஸ்ரீ பாஸ்கரம் சோபித [திவ்யரத்னம்
ஸ்ரீ ராமரத்னம் புவி விப்ரரத்னம் ஸ்ரீ ராமரத்னம்
ஓம்தத்சத் ப்ரும்மார்ப்பண மஸ்து. [விரஸாங்நமாமி
சுபம் — சுபம் — சுபம்.

## 39. ராகம் சௌராஷ்ட்ரம் — தாளம் ஆதி

### பல்லவி

நீ தாசத் வேலுந்தனுக்கு நித்ய ஜெய மங்களம் (நீதா)

### அனுபல்லவி

1. வ்யாஸம்பரீஷர் போகர்
பக்தாதி பக்தர் போற்றும் (நீதா)
2. நாரதாதி முனிவோர் நல்ல ப்ரஹ்
லாதர் போற்றும் (நீதா)
3. வள்ளி தெம்வானை நித்ய
வைபோக மயில்வாகன (நீதா)
4. கலியுக வரத வேல காருண்ய பரிபாலா (நீதா)
5. ஞானத்மரத்னம் த்யான
பூரித நித்யத்புத (நீதா)
6. தேவாதி தேவர் போற்றும்
தீன சரண்யு புண்ய (நீதா)

ஸ்ரீ சுப்ரமண்யார்ப்பணம்

ஓம் தத் சத்

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

## விக்னேஸ்வர த்யானம்

சீதாபதே - நாமனஸூநா என்ற மெட்டு

ராகம்—கமாஸ் தாளம் - தேசாதி

### பல்லவி

தேவாதி தேவா - கஜமுகா வித்வான் சுஜன - விக்னேஸ்வரா
(தேவா)

### அனுபல்லவி

பூஜான் ஜனே - புவி சுந்தரா பக்தர்ப்ரியன் நீர் - பதமருள்க
(தேவா)

### சரணம்

க்ரோதம் மோகம் லோபம் தவிர் உமது பாத
வேது திருமலர் - கண்டேன் கணேச ஸ்வாமி கணபதி
சாதகங்களாக சேவிதம் செய்த்யான - கீத ரத்னம் சொல்
(தேவா)

## 2. திருப்புகழ்

1. விதியான எந்தன் - மதியான கந்த நிதியான உந்தன்
திருப்பாதம் கதியான மைந்தன் - துதியான பந்த
பதியான சொந்த - குருநாதா.

2. அருள்தானும் நித்யப் - பொருள்தானும் சத்யமருள்தானும்
பத்ய - மனுவேதம் இருள்நாளும் களைந் - தருள்நாளும்
விளை - உருவாளும் மூளை - சொல் சங்கீதம்.

3. தினம் பாடிச் சொல்ல - மனம் நாடி வெல்ல வடிவேல் சொல்
ஞான - குருபோதம் விரிவாகும் பக்தி - பரிவாகும் சக்தி
அறிவாகும் முக்தி - நரகேகா.

4. மனமே சொல் நித்யம் - குணமே கொள் சத்யம்
குகனே நல் பத்யம் - முருகோனே இடர் தீர்த்தருள்வன்
திடகாத்ர நல்வன் தினமேற்று நம்பென் - பெருமாளே.

## 3. சரஸ்வதீ த்யானம்

ராகம்—கமாஸ் - தாளம் தேசாதி

பல்லவி

வேதாந்தமே - வேணி சுஜனீ
வித்யான் விஷய - கல்யாணியே (வேதா)

அனுபல்லவி

நாதாந்தமும் - கினதம்மணி
நயனம் அயனின் - நல்சுந்தரி (வேதா)

சரணம்

1. ஸ்ரேயசுகி நின்பாதம் - சரண் சுகலேவாணி
பாணி புஸ்தகமுள் - பத்மாவதிநல்
மாமனுசகல - தேவீ அம்பிகாநின்
மாயமென்ன வேணி - க்யாதி ரத்னம்சொல் (வேதா)

2. க்யாதி ஸாஸ்த்ரபாத்ர - கல்வி கனகராணி
யாருமில்லே சொந்த - சாத்மீகதாயென்
பாசமனமது - ஆசைகொள் விசேஷ
நேசக்கல்வி ஈவை - தாஸரத்னம் நல் (வேதா)

## 4. ராமத்யானம்

ராகம் - ஜனரஞ்சனி—தாளம் - தேசாதி

பல்லவி

ஸ்மரிப்பாய் சுகமுள் - ராமநாமம்
ஸகலசித்தி சிந்தித - நேமம் (ஸ்ம)

அனுபல்லவி

கலிகால பாபம் - தவிர்க்கும்
காமகோடி விசேஷ நித்யம் (ஸ்ம)

சரணம்

1. ராமநாம பஜனம் தினம்செய்
காமக்ரோதலோபங்கள் முதலிய
கோரதுன்பம் தீர்க்கும் இதேஸம்
ஸாரபந்தம் போக்கும் - கரையேற்றும் (ஸ்ம)

2. பூமிவாழும் சதல உயிர்கள்
பூரிதாதி மூலனின் க்ருபையில்
பூஜிக்க நல்லாதரவாகச்சொல்
பூவினோத ரத்னம்ருத கீதம் (ஸ்ம)

## 5. விஷ்ணு த்யானம் - வாதாபி என்ற மெட்டு

ராகம் - ஹம்ஸத்வனி—தாளம் - ஆதி

பல்லவி

நாராயணபஜனம் செய்வோம் நல்
நாரதாத்மம் - நரப்ரசித்தம் ஸ்ரீ (நாரா)

அனுபல்லவி

பூபாதத்தில் - பூஜிதசரணம்
பூஜனரத்னம் - புண்யவிதரணம்
தாரக மந்த்ரம் - தரியிதேதந்த்ரம்
தன்ய சுதந்த்ரம் - திவ்ய நிரந்தரம் (நாரா)

சரணம்

1. சுகாரம்பஸம் - பவ - ரகுசரித்ரம் ராகவம் ஸ்ரீ - கோசலசுபுத்ரம்
முகாஸ்ரீப்ரிய-ராம்கதாரஸிகம்மூலாதாராம்-ஸ்ரீ ஹரிகீர்த்தனம்
காலா சர்வாபீஷ்டா சூத்ரம் கிட்டாமந்த்ரம் - முக்தி நிரந்த்ரம்
நிர்மல மன துடன் - நினைப்பம் சுதந்த்ரம் நமக்கேதெமபயும் -
நாம சுமந்த்ரம் ஜனவழி ஆசாபாசா நேசம் தவருசிராகம்
தானே ஸ்வாஸம் அனுதி ரகுவர - ராகவனின் பம்
ஹம்ஸத்வனி பூரித சங்கீதம (நாரா)

## 6. ஓடிக் கீர்த்தனை

ராகம் - காம்போதி—தாளம் - ஆதி

பல்லவி

லக்ஷக்ஷார்ச்சன மஹிமை ரத்னம் சொல்லக்காணவே
லக்ஷக்ஷம் கண்கள்தான் வேண்டும் (லக்ஷ)

அனுபல்லவி

மாமறையோர்கள் தொழும் மன்னுதிமன்னன் குகன்
மாமலர்தனில் மொழியும் மஹத்வம் ப்ரும்மானந்தம் (லக்ஷ)

சரணம்

1. கந்தனின் சேவையை நாடி காணவருவோர்கள் கோடி
க்யாதி என்னசொல்வேன் நித்தம் கொண்டாடிப்பாடி
கண்யசுப்ரமண்யனின் தாள்தேடித் திருவடிகூடி
நீடித்த வ்யாதிகள்தீர நித்தம் வருவோர்கள் கோடி (லக்ஷ)
2. பில்லி பைசாசங்கள் பித்துப் பறந்திடுமே காத்துச் சேஷ்டை
பார்வை சூனியங்கள் போக்கும் பாரமில்லையே.
பக்தர் துரைஸ்வாமி அய்யர் பக்தியுடன் மந்திரிக்க
பண்புடன் எவர்க்கும் சுகம் வந்திடும் விந்தை
[என் சொல்வேன். (லக்ஷ)

3. கொஞ்சமும் சம்சயமில்லை தஞ்சமென்றோர்களைக் காக்கும்
நெஞ்சம் கொண்ட கந்தனின் பெருமை என் சொல்வேன்
அம்சமாம் நீலகண்டனின் வம்சமாம் பொய்யல்ல வ்யாதி
த்வம்சமாம் தாய்த்துடன் கொள் அம்சம் யாராருக்கோ -
[நெஞ்சே (லக்ஷ)

4. பொய்யான ஜாதி மத - பேதங் கடந்த பேர்கள்
போற்றிடும் செந்தாமரைக் கமலப் பொற்பாதன்
கந்தனை நம்புவோர்கட்கு - கவலைகளென்பதே யில்லை
கருத்துடன் ரத்னம் சொல்வேதம் கண்டுகளித்
[தானந்தம் கொள். (லக்ஷ)

5. தங்கத்திலும் வெள்ளியிலும் தாய்த்துக் கட்டிக்கொள்வோர்க்கு
தாமதமில்லாது சர்வ - கார்யசித்தியாம்
சாச்வதானந்த ரத்னம் சொல் சமயமிதுதான் சமயம்
சாதகம் அடைவோர்க்கிது சமயம்போல் வாய்ப்பதரிது. (லக்ஷ)
6. பார்த்திப வருஷத்தில் நல் தை மாதத்தில்
சப்தமி - திதி பரணி நக்ஷக்ஷத்திரம் கூடின காலம்
இருபத்தைந்தாம் முருகன் லக்ஷக்ஷார்ச்சனை யிதுபோல்
[வாய்ப்பதரிது
அரிது இதன் பெருமை பெரிது. (லக்ஷ)
7. அம்மங்குடி தனில் நடக்கும அதிசயம்நா னென்னசொல்வேன்
அப்பப்ப அதன் பெருமை யின்னம் கேள் சொல்வேன்
அந்தரங்கமாய் அரவம் தீண்டினோர் தந்தி கொடுத்தால்
தக்ஷக்ஷணம் விஷம் ஏறாது - துரைஸ்வாமி
[செய்வார் தோது. (லக்ஷ)

8. மல்லிகை முல்லை ரோஜா மரிக்கொழுந்து வெட்டிவேர்கள்
செண்பக பாரிஜாத மலர்கள் தூவியே - மேன்மேலும்
துளசி பில்வம் பத்ரம் புஷ்பம் பதினாயிரம் மேளதாள
சகல வாத்யம் - மஹிமை மந்த்ரமென்ன சொல்வேன். (லக்ஷ்)
9. அந்தணர்கள் வேதமோதும் அதிசயம்நா னென்னசொல்வேன்
அன்னதான மஹிமை - அதை என்ன சொல்வேன்
ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் சொல்ல - லாகாத
தென்னாலாகுமோ - அடியேன் சொல்லத்தரமோ. (லக்ஷ்)

## 7. கும்மி மெட்டு

### கண்ணிகள்

1. புண்யன் ஸ்துதியது பாடிடுவாய் தினம்
கண்யன் மலரடி தேடிடுவாய் - சுப்ர
மண்யன் அருள் பதம் நாடிடுவாய் - மனம்
எண்ணி நலம் நீ கொண்டாடிடுவாய். (புண்)
2. பூட்டைத்திற உந்தன் கையாலே - மனப்
பூட்டைத்திற உந்தன் மெய்யாலே - நின்
வீட்டைத் திறக்க விழிப்பானேன் - அடி
விதியிதல்லவா ஞானப்பெண்ணே. (புண்)
3. பத்தமிருக்குது நெஞ்சுக்குள்ளே - தின
சுத்தமிருக்குது அஞ்சுக்குள்ளே - குண
சித்தமிருக்குது கல்லுக்குள்ளே - அதை
நித்தம் துதி செய்வாய் ஞானப்பெண்ணே. (புண்)
4. கண்தெரியா மனப் பேய்க்குரங்கு யிதைக்
கண்டபடி தினம் ஓடவிட்டு - நீ
வீண்வம்பு பேசும் பித்தரைப்போல் நிதம்
வேடிக்கை பார்ப்பதேன் ஞானப்பெண்ணே. (புண்)
5. ஞாயமிருக்குது நெஞ்சுக்குள்ளே நல்ல
பாம்புமிருக்குது புற்றுக்குள்ளே நல்
வேதமிருக்குது பார்த்துக்கொள்ளேன் - தின
வீம்பு பிடிப்பதேன் ஞானப்பெண்ணே. (புண்)
6. பித்தம் தெளியவை மெய்யாக - அதை
நித்தம் தெளியவை மெய்யாக - உன்
சித்தம் தெளியவை மெய்யாக - ரத்னம்
அர்த்தம் தெளியவை - ஞானப்பெண்ணே (புண்)

7. முக்திக்குவித்தாய் நீ முந்திக்கொள்வாய் - அடி
முன்யோசனை வேண்டும் ஞானப்பெண்ணே - நித்ய
பக்திசெய் கந்தனை பக்திசெய் பக்திசெய்
பின்புத்தியேனடி ஞானப்பெண்ணே (புண்)

8. சத்வமுடன் தத்வம் எண்ணிப்பார்த்து நீயும்
சாகுமுன் சுகம்தேடு நரகம் செல்லா - நல்
சத்சங்க பஜனம் செய்துன்னுள் கார்த்துக்கொள் -
சிறிப்பதுமேனேடி ஞானப்பெண்ணே (புண்)

9. மங்களசம்ப்ரம மெங்கும் கொழித்திட
மாதவ பக்திசெய் ஞானப்பெண்ணே - கார்
சங்கீதரத்னம் சொல் சமரஸம்தரும்
நல்ல சமயமிதுவடி ஞானப்பெண்ணே (புண்)

## 8. காணக்கண்கோடி வேண்டும் என்ற மெட்டு

ராகம் - காம்போதி—தாளம் - ஆதி

பல்லவி

பார்க்க நின்பாத ஸேவை - ப்ருஹ்மானந்தம் முருகா (பார்)

அனுபல்லவி

வேதம்சொல் விதரண - சரவண ஷண்முகனுன்
ஜெகமீதுற்றவர் புகழ் - பாதமதையருளும்
புகலவொண்ணுவேலவனுன் இணையிந்தவேளையார்
இறைவனுன்னடி கதியென அடங்க - தமிழ் பொங்க - தங்க
மாலை குலுங்க - வேலோங்க - வித்வ
ரத்னம் விளம்பும் முகம் (பார்)

சரணம்

வேலோடுடன் வரவும் - விண்ணும் மண்ணும் அதிரும்
மயில்மீதினில் இலங்கும் மஹிமையுடன் வரவே
ஞாலம் - தன்னிலுன் - குண - பஜனம் செய்வோர்க்கு - நல்ல
சுகமும் உண்டாக க்ருபைபுரியும் வள்ளிதன் ப்ரிய
பாலசுப்ரமண்யனுன் - பெருமையதையின்ருசையுடன்
புகழ் - அம்ருதரத்னம் மொழிபேசும் ப்ரியரஞ்சித -
பக்தர்கள் போற்றும் நல் - பாலக்ருஷ்ணன்
தன் - மருகன் உம்மை தினம் (பார்)

ராகம் கல்யாணி — தாளம் ஆதி

பல்லவி

ஸ்ரீ ஹரிக்ருஷ்ண - சின்மய க்ருஷ்ண (ஸ்ரீ)

அனுபல்லவி

சுகமணி வண்ண - யதுகுல கண்ண நீலமேக வண்ண
நித்யலக்ஷ்மி மன்ன (ஸ்ரீ)

சரணம்

1. மனைவி இன்பத்தில் - மதி மயங்கினேன்
மஹிமை தெரியா - ததிதியங்கினேன்
பரம கருண - நிதி விதரண
பக்தராத்மத்யான - பண்டரீபுராண (ஸ்ரீ)

2. அனுதினமுன் பொன் - னடிகள் நம்பினேன்
அகற்றும் இடையூர் - ஐயே - ததும்பினேன்
அகமகிழ்ந்துன் தாள் - அடி வணங்கினேன்
அடைக்கலம் நித்யம் - ஆண்டவா ரத்னம் (ஸ்ரீ)

## 10. காவடிச் சிந்து

1. பொன்னுலகம் தன்னில்மிக - சென்நெல் பழனுபுரி தன்
நன்னயக்குன்றிலும் இன்று நிற்பவன் - அன்று - சூரனை
வதைத்துமுயிர் கொன்றவன் - திரு தோகைமா மயில்
வாகுடனேறி கானகமாமுதல் - வீரியமாய்ச்சுற்றி
வள்ளியை மணம்புரிந்து கொண்டவன் - தெள்ளித்
தந்த தினைமாவை அள்ளி உண்டவன் (பொன்)

2. மின்னுலகமன்ன ரத்னம் - தன்னிலுளம் சொன்ன கீதம்
பூஜனங்கள் நெஞ்சமதில் கொஞ்சவே - துதியாண்டுமே
யுளத்தில் பக்தி மிஞ்சவே - கதி - ஆறுமுகனடிதான்
தஞ்சமென - கூடிபஜனம் செய்தானந்தமுற - பஞ்சமேதின
மணுகாமஞ்சமே - புகழ் - ரஞ்சிதமாய்த்தானும்
முக்தி வஞ்சமேன் (பொன்)

## 11. விருத்தம்

1. பக்தியில் சிறந்த பக்தர் - புகழும் உத்தமம்
கண்டு - சித்தமே மகிழ்ந்து என் - ஷண்முகன்
உள்ளங்களித்து - முக்தியும் நிச்சயம் தந்து - மோகமாய்
வேலன் தானும் - நித்தமே நினைந்த நெஞ்சால்
நேர்வழி தருவாரின்றே (பக்)

2. பழநியில் வாழும் கந்தா - பமேவல்லை நீர் கண்டும் -
பாராமலேயிருந்தால் பாலன் நான் என்ன செய்வேன் -
படும் துயர் நீக்கியே பாலனென்னைக் காவாய் - பற்றுள்
உன் திருவடி சரண் ரத்னம் நித்யமே (பழ)

3. பழநியில் வாழும் நித்யபாராளும் குகஷண்முகா -
பந்தனே சொந்தனே என் பஜிமனம்
வளரும் வேலா - தினம் துதித்தாசையாக - திவ்யமுன்
நல் சேவை கண்டேன் - நித்யமுன் முகமும் காண
நீரருள் நெஞ்சம் கொண்டேன் புவிதனில் வாழும்
ஜென்ம - பூமாந்தர்புரி பாவங்கள் - புண்யனே கண்யனே
நீ களைந்தினி சுகமும் தருவோன் நின்மலர் பணியா ஏசும்
துட்டருக் கட்டம் புரிவோன் தத்வனுன் தர்சனம் தாரும்
தாமதமின்றி இன்றே ரத்னனுக்கருள வாரும் ராகவன்
தன்மருகா - ரம்யனுன் சரணம் காரும் - ராகஸங்கீத
முருகா - சத்யனுன் சேவை தருக சாதகம் செய்திடும் வேல்
நித்யனுன் நேர்மை பெருக நீதா ஜெய மங்களம் (பழ)

## 12. மஹிமை மேவும் கோபாலனே என்ற மெட்டு

1. கடைக்கண் பார்வடி வேலனே
காரும் தீனதயாளனே
கருதும் மாந்தர்கள் பஜனசம்ப்ரம
க்யாதி திருப்புகழ் சீலனே
அடைக்கலம் நின்னை அடைந்தும் நான்
அடிமைமேல் மனஸ்தாபமேன்
அருளெனக்கருள் திருவடிசரண்
அப்பனே பொன்னப்பனே (கடை)

2. ஆவதும் உன்னாலன்றோ அழிவதும் உன்னாலன்றோ
அறியும் பக்தர்கள் ஹ்ருதய நித்யனுன் - ஆனந்தம்
இந்நாளன்றோ இன்னம் தாமதமேன் நன்றோ எனக்கருள்வா
தேன்இன்றோ எளியவன் ரத்னம் உன் க்ருபை பெற்று
உய்யும் நாள் - எந்நாள் என்றோ (கடை)

## 13. பிறவிப் பெருங்கடலை — என்ற மெட்டு

1. முருகன் பொற்பதமலர் போற்றிடுவாய்
போற்றிடுவாய் நாளும் சொல் ஏற்றிடுவாய் மனமே. (முரு)

2. அகண்ட இப்பூதல ஆண்டி ஷண்முகனை நீ
அடிபணிந் தாசைகொண் டகமகிழ்வாய் மனமே (முரு)

3. கண்யனும் குகன் புண்யனின் சேவையே
நீ புரிவாய் நலம் உடன் அடைவாய் மனமே (முரு)

4. நித்யனும் சத்யன் நிர்மல வேலனே
நீ புகழ்வாய் நிதம் ஹிதம் பெறுவாய் மனமே (முரு)

5. சுகந்த சங்கீத ரத்னாம்ருதம் அறிந்து நீ
சுயபுத்தியால் முக்தி வழி அடைவாய் மனமே. (முரு)

## 14. சுகுமாரா சுந்தரா — என்ற மெட்டு

1. சிவபால ஷண்முகா - சிவகாமி பார்வதி
சீலா தயாளா வள்ளி வேலனே
க்ருதார்த்த கருணாகர ஸ்ரீ காருண்யகீதா கெம்பீரனே
தேவர் போற்றும் - ஸ்தோத்ரபாக்யா
தேடியே புகழ்ந்தோம் ஸ்லாக்யா
திவ்ய தர்சனம் நீர் தாரும் வேலா
நீர்தான் ரத்னம் சொல் க்ருபாநிதி. (சிவ)

2. ஜெயசீலஷண்முகா ஜெகன்மோகனா எங்கள்
தேவா தெய்வானை வள்ளி லோலனே
ப்ரதாப சுகுணாகரஸ்ரீ ஆபத்சகாயா சிங்காரனே
மாதவாத்ம மாசிலாக்யா மாமறையோர் மகிழ் பாக்யா
மங்களமுகா வேல் மஹாவாக்யா
நாதா நன்மைசெய் தயாநிதி. (சிவ)

## 15. ஏழை பிராமணர் என்ற மெட்டு

1. மாமலை வேலவா வந்தருள்—வரம்
அருள் குகா நமஸ்காரம் உன் சரண
காலைக்கும்பிடுமுன் ரத்னம் சொல் கொஞ்சம்கேள்
கண்யனே என் நேரில் வருகுவாய் (மா)

2. ஜெகஜன வடிவேலா சமயமும் - வர
தடை என்னே காலமும் நேரமேன்
மருவில்லா மாணிக்கமாகிய என் கந்தா
திருவுள்ளம் அறியாயோ துணையும் நீர் (மா)

3. ஜனனமும் மரணமும் சகஜமே - இதற்
கழுவதேன் நேர வித்யாசமே
சுகமுள்வேல் ஸ்தோத்திரமாகிய உன்
திவ்ய - திருவடிபணியாதார் ஜன்மமேன் (மா)

## 16. என்னை சோதித்தலாகுமோ என்ற மேட்டு

1. என்னை சோதித்தலேனையா என் ஆப்த முருகா (என்)
எந்தன் அந்தரங்க கந்தன் உன் மஹிமை எவரோ சொல்
இச்சமயம் உன்பெருமை யான் எடுத்துரைத்தேன்வேல் (என்)
2. எல்லா உயிர்களிலும் - இலங்கிடும் தெய்வமேயுன்
திவ்யாதி மலர்சரண் தேவாவிடேனுன் பாதம் (என்)
3. மன்னரத்னம் தன்னிலுளம் சொல் சங்கீதம் சத்ஜன
சத்யமுருகன் நீர் குக - ஸ்வாமி ஷண்முகமன்றோ (என்)
4. சர்வாத்ம சக்தியுமை - பெற்றெடுத்த ப்ரபுவன்றோ -
சாச்வதனே க்ஷமியும் - சாதகம் செய்திடும்வேல் (என்)

## 17. ஹரே கோபாலா கோவிந்தா என்ற மேட்டு

ஹரே ஞானாத்மஹே கந்தா வடிவேலவா
மயில் வாகனு சுகந்தா ஷண்முகா
நித்யனே ஆளவா நீதனே ஆளவா
நாதனே குமரேசா நித்யம் கார் கார் கார்
இன்புடனேயுமது திருவடி மலரடி
தேடியேவேல் பணிந்தோம்
குருபரதேசிகா கோரும் நல் வரந்தா
காருண்யா காத்தருள்வீர் (ஹரே)

## 18. சிவத்யானம்

### கோபியர் கொஞ்சும் என்ற மெட்டு

### பல்லவி

கோமள வல்லி சமேதா - ஸ்ரீ சுந்தரேசா (கோ)

### அனுபல்லவி

1. பூஜித நித்ய - புகழுடலளித்த புண்யகண்ய லாவண்யனே
தீனசரண்யா பவபயம் தவிர்தன்யா - பக்தர் காருண்யா (கோ)
2. ரத்னம் துயர்தீர் - அப்பனேயுன்சரன் ஆனதை என்றும்
மறவாய் - க்ருபை புரிவாய் - க்யாதிகொள்ததி வருவாய்
கீதம் பெறுவாய் (கோ)

## 19. ராகம் ஹரி காம்போதி — தாளம் ஆதி

### பல்லவி

பேரன்பே பெரும் சிவமாம் - அருட்பெருஞ்ஜோதி தனிப்
பெரும் கருணைக் கடல் நம் (பேர)

### அனுபல்லவி

ஜீவகாருண்யமே - சாயுச்சியத்திறவுகோல் - கண்டு - மனம்
கொண்டு செய்ய - தொண்டு - க்ஷேமமுண்டு நம் (பேர)

### சரணம்

1. ஊன்சுவை உண்டுஉடல் - வளர்க்காது நாமென்றும்
கொல்லா நெறியாய் - குரு அருள் நெறியாய்
உயிர்க்கொலை தவிர்ப்போம் - உத்தமராவோம்
உகந்ததிதே சிவம் சம்மதி - உயிர் அனைத்தும் ஒளிர் அறிவே (பேர)

2. அன்பர் ப்ரகாசரசாய் அவர்க்கருட் செய்யமுதாய்
அன்பர் புகழ் பரம்பொருளாய் மலையாய் அமைந்த சங்கீத
ரத்னம் பேரொளியாய் அமர்ந்தருளும் அவர்பெருமை
அறியுயெவர் தரம் தரம் சொல் (பேர)

## 20. ராகம் சேஞ்சுருட்டி தாளம் ஆதி

### பல்லவி

குமரேசா - குமரேசாவென - குறித்திடுவாய் நெஞ்சமே
நமன் - அணுகாமுன் சிவமைந்தனையும் சரண்
செய்வாய் தஞ்சமே (கும)

### கண்ணிகள்

1. எந்தக்காலத்தில் - எமனுயிர் பறிப்பான்
என்பதை அறியாயே - என்றும்
சொந்தமானதல்ல - உடற்தோலதில் நித்ய
ப்ரியமும் வையாயே (கும)

2. நாளைப்போக்கி நித்தம் - வீணிலே கழித்துன்
வாழ்வையொழிக்காதே - எந்த - வேளையும்
பெண் பொன்னாசைகொண்டு நர - குற்றென்றும்
விழிக்காதே (கும)

3. உன் - வயது சென்று கிழ மாகிவிட்டபோ துனக்கார்
உதவுவார் நின் - உடலைவிட்டுயிரும் பிரிய - சுடுகொடெடுப்பார்
ஹிதமும் யார் (கும)

4. நினைக்க அன்று குகன் - நாமம் சொல்லவே
அறியாதுளறுவாய் - உடன் - திகைத்து
நெஞ்சம் துடித் தாவி யிழப்பாய்
துணையே துணருவாய் (கும)

5. ரத்னகீதமுன் நித்யலை நினைந்தே - நல்வழி
அடைவாயே - நின்று - நத்தியே பக்திசெய்
தென் நெஞ்சே நல்வடி - வேலனைப் பணிவாயே (கும)

6. சொந்தமானநம் - கந்தனைப் புகழ்வாய்
நற்பதம் பெறுவாயே - என்றும் பந்தமான
அவன் - திருதாள் மலரை - சிரங்கொள் மகிழ்வாயே (கும)

7. பக்தி மார்க்கமது - முக்தி மார்க்கமாம்
பரவசமாக்குமாம் - உன் - பிறவிப்பெருங்
கடலைநீ தாட்டிட - பணிவேல் கார்க்குமாம் (கும)

8. சொந்தமார் சொல்லுன் - மனைவி மக்கட் பொருட்,
சதமோ சதமோ சொல் - பின்
வந்து யாருதவி - நொந்துபோகு முடல்
வெந்து சாம்பலாகும் (கும)

9. எந்த நாளுமில்லை - இந்த ஜென்மம் தொல்லை
இனி துணை யாருமில்லை - கதி - என்றறிந்து
நீயுமிந்த வேலை பஜியிகபரம் பெறுவாயே (கும)

10. உன் - பெண்டு பிள்ளை வீடு - கன்று மாடு தனம்
பின் தொடர்ந்து வருமோ ப்ரியம் - கொண்டு வேலன்
மலரண்டு க்ஷேமமுண்டு ப்ரியமுண்டோ கண்டு (கும)

11. என்றுமுந்தன் பாசம் - கந்தன்பால் கொள் நேசம் - இதுவே
விஸ்வாசம் - பஜி - எந்நாளு முனக்கேற்ற புத்தியிது - இனி
சேர் சந்தோஷம் (கும)

12. ரத்னம் சொல் பஜனம் - நித்யம் செய் சுஜனம் நன்மை
கேள் விசேஷம் - நிஜம் - நம்பு ஞாயவழி - நின்று
நேர்மை மொழி நலமாளுல்லாஸம் (கும)

13. பொங்கும் சங்கத்தமிழ் - புலவர்கள் போற்றும்
புண்ய சுப்ரமண்யோன் - புவி -
எங்கும் சங்குகொண் - டூது மண்ணல்
தன் - ஜெகஜனமால் மருகோன் (கும)

14. சந்ததமுமுரை - ஜல்தி ஜல்திஸ்மரி
சிவசுதன றுமுகனே - இன்று - சத்வமுன்
ஹ்ருதயம் - தத்வமுடன் கொள்ள - சமயம்
நல்ல தருணம் - (இதுவே) சமயம்
நல்ல தருணம் - (வாய்த்தது) சமயம்
நல்ல தருணம் (கும)

15. பொங்கும் மங்களமும் - எங்கெங்கும்
தங்குக - பூரிதமானந்தம் - உன் - பங்கிருந்து வேல் -
கார்த்திடுவன் - கடைக் - கண்ணால்
பார்த்திடுவன் - (பன்னிரு)
கண்ணால் பார்த்திடுவன் (தன்னிரு)
கண்ணால் பார்த்திடுவன் (கும)

## 20. முருகன் நாமாவளி

1. இஷ்டசித்திப்ரத முருகேசம் - பஜ -
ஈஸ்வரதனயம் முருகேசம்
கஷ்டஹரண ரத முருகேசம் - பஜ -
கருணாஸாகர முருகேசம் (இஷ்)

2. ராகவன் மருகா முருகேசம் - பஜ -
ராஜ பழநிஸ்தல முருகேசம்
ரவிக சுந்தரம் முருகேசம் - பஜ -
ரங்கராஜப்ரிய முருகேசம் - (இஷ்)

3. ரத்னம் சொல் ஹரஹரா முருகேசம் - பஜ
ரம்யமதுரிதம் முருகேசம்
ரக்ஷிதசத்ஜன முருகேசம் - பஜ -
ரமணீய காத்ரம் முருகேசம் - (இஷ்)

4. வனஜலோசனம் முருகேசம் - பஜ -
வாஞ்சிததாயக முருகேசம் -
வல்லிரமணம் முருகேசம் - பஜ
வரதமாதுலம் முருகேசம் - (இஷ்)

## 21. வேறுமெட்டில் முருகன் நாமாவளி

1. சரவணபவனே - ஷண்முகனே - சிவ
சுதனே அறுமுகனே - பஜனவிநோதனே -
பக்தர்கள் ப்ரிய - சுகுணாகர குகனே (சர)

2. குமர குருபரா - குறைதீர்க்கும்
சுகுணாலயக் கொழுந்தே வேல்
மதுரிதவசனம்ருதமொழிமேல் வள்ளி
மங்கள சுபகரனே (சர)

3. அனுதினம் பணிந்தோம் - அன்பொடு
போற்றிடும் அடிமை எங்களைக்காரும்
அகில வள்ளி நித்ய - ஆனந்த முருகா
அப்பனே ஜெகத் குருவே (சர)

4. சமயமருள்வேல் - சம்சயமேனினி
ஜல்தி ஜல்தி வருவாய்
சகஜமுடன்பணி - ரத்னம் சொல்லணிவாய்
ஜல்தி வரம் தருவாய் (சர)

5. இகபரமருள்வேல் - கருணாகரனே
குகனே சிவன் மகனே
இதுதியுனைப் பணிந்தோம்
ஜெயமங்களம் - திருமால் மருமகனே (சர)

## 22. ராதாக்ருஷ்ணஸே என்ற மெட்டில்—முருகன் நாமாவளி

1. தேவாதிவ்யவேல் - வள்ளி மணாள
தரணீ பரிபாலத்புதசீல
தத்வநித்ய தாஸாத்மதயாள
தினலோலா தென்றல் - குன்றாள் குணாள (தேவ)

2. வாவா வடிவேல் - வித்வவினோத
விஷயபஜனுத் - மகுருநாத
வந்தருட்செய் - வேதாந்த சத்போத
விமலா கீதச்சொல் - ரத்னப்பொற்பாத (தேவா)

3. பாலால் அபிஷேகங்கொள் விசேஷ
ப்ரபலமுள் பஞ்சாம்ருதங்கொள் பாச
பக்தர்சித்தர் போற்றும் த்ம உல்லாஸ
பழநிமாமலை ப்ரியவிஸ்வாஸ (தேவா)

4. க்யாதி வடிவேல் - கண்யலாவண்யா
கண் கண்ட தெய்வம் - வேறில்புண்யா
கைத்துணைவந்தாள் - ஜீவகாருண்ய
கருணு ஸாகர - ஸ்ரீ சுப்ரமண்ய (தேவா)

## 23. இராகமாலிகை

எல்லாவுயிர்கட்கும் ஈசசர்வேச்வரராய்
எம்பெருமானென்றுமாய்
பல்லோரிலும் பக்ஷபாதம் செய்யாதஸ்ரீ
பரப்ரும்மஸ்வரூபராய்
ஸ்ரீவிஷ்ணுவாய் த்ரிபுரருத்ரராய்
நித்யராய் - ஸ்ருங்கார தெய்வமாகி
சர்வபரிபூரண சம்ப்ரமவஸ்துவாய்
சாச்வதானந்தராகி
சக்திப்ரசித்தியாய் சமரஸலோலராய்
ஜெகஜ்ஜோதி சூர்யராகி
ஆணுமாய் பெண்ணுமாய் அலியுமாய்
அனைத்துமாயன்னையாய் தந்தையாகி
அருட்செய் நல்குருவுமாய் - ஆதாரமூலராய்
ஆனந்த ஹ்ருதயராகி
அன்பர்புகழ் சுந்த்ரராய் மந்த்ரராய்
தந்த்ரராய் நித்ய நிரந்த்ரராகி
ஈரேழ்பதினுங்கு லோகசுதந்த்ரராய்
எங்கும் ஆள்வடிவேலராய்
ஏற்றதோர் கலியுகவரதராய்
பற்பல அவதார புருஷராகி
எவ்வித ரூபத்துடனிருந்தாலுந்தான்
ஏற்றும் தெய்வம் ஒன்றுதான்
என்று நீ கண்டு தெளி என் ஹ்ருதய நெஞ்சமே
ஏற்ற நற்புத்தியிதுவே

## 24. ராகம் மாயாமாளவகௌளை—தாளம் ஆதி

பல்லவி

வடிவேலாவா - வடிவேலாவா - ஆறுமுகா - ஐயாவென -
பஜிப்போம் நித்தம் - பஜிப்போம் நித்தம் - பஜிப்போம் நித்தம்
பார்புகழ்வோம் (வடி)

கண்ணிகள்

1. பிழைத்துப்பணம் கொடுக்ும்வரை நம்மைப்பிரியார்
பிழைப்பது போய்விடின் - பிறர் நம்மை அறியார்
கொடுக்கக் கொடுக்க தனம் குறை - அவர் கூறுர்
கொடுப்பது ஆய்விடின் - எவருமே வாரார் (வடி)

2. உழைத்து உடல் தளர - உண்மை நன்மை தெரியார்
உற்றது சொன்னுலுமவர் நம்மைக்குறியார்
உலக வாழ்வு பகற்கனவேயாகும் - உயிர் துறந்தால்
கட்டை காடது ஏகும் (வடி)

3. மனைவி குழந்தைமற்ற சுற்றமதுபோம்
மற்றதொன்றுமேயுடன் வல்லே என்றறிவோம்
மண்பொருள் மாதர் மூவாசைகளகற்றுவோம்
மறுபிறவிக்காம்பே - ரின்பமதைக்கொள்வோம் (வடி)

4. புவியிலுள்ள அல்ப - இன்பமதை வெறுப்போம்
புரிந்திடுவோம் தெய்வஸ்துதி தினம் ஸ்மரிப்போம்
மனப்பேராசை மாற்றியதைத் தள்வோம்
மகிழ்வுடன் கிடைப்பதால் ஆனந்தம் கொள்வோம் (வடி)

5. இவ்வுடல் பிறந்தடிக்கடியிது ஒழியுமே
இதன் ப்ரேமையதை - விடுவமிஃதழியுமே
என்றென்றுமவன் பஜனம் - ஆனந்தம் தருகுமே
என்றுமழியாப் பெரும் - மூக்தியும் வருகுமே (வடி)

6. பாசபந்தமதை - தினம் ஒழித்திடுவோம்
பவபயம் தீர்ந்தினி ரத்னம சொல் விழிப்போம்
பஜனும்ருத சங்கீத காலங்கழிப்போம்
பார்புகழ் மங்களமெங்கும் கொழித்திடுவோம் (வடி)

## 25. முருகேசா என்ற மெட்டு — ராகம் செஞ்சுருட்டி

பல்லவி — தாளம் ஆதி — மயில் பாட்டு

மயிலே கார் - மயிலே கார் என்று - மதித்திடுவோம்
மயிலே - மட மயிலேயுன் சிறகை விரித்து நிர்த்தம் - ஆடு
மயிலே - இள மயிலே நின் சிறகை விரித்து நிர்த்தம்
ஆடு மயிலே (மயிலே)

## கண்ணிகள்

1. எங்கள் மாமயில் செந்தில் மாமயில் தங்க மாமயிலே
அருள் அம்பொன் மாமயில் - செம்பொன் மாமயில் - நல்
அழகுள் மாமயிலே (மயிலே)

2. தென்றல் மாமலை தங்கும் மாமயில் திவ்ய மாமயிலே - தொழும்
சொந்தமாமெங்கள் பந்தமான நல் சொகுசுள் மாமயிலே (மயி)

3. அந்தமான எம் சந்த மாமயில் அன்புள் மாமயிலே - அதி
சுந்த்ரமான வேலேறும் மாமயில் ஆசை மாமயிலே (மயி)

4. கொஞ்சும் மாமயில் உந்தன் தாள் தஞ்சம் கெஞ்சினேம்
நன்மயிலே - கதி வஞ்சமேனினி பஞ்சமேனுரை
சொல் வர்ண மாமயிலே (மயி)

5. வேலன் மோகன வள்ளி தெய்வானை தன் வாகனமாயிலே -
நித்ய சேவற்கொடியோன் ஷண்முகநாதனின்
சேவக மாமயிலே (மயி)

6. போற்றும் மாமயில் ஏற்றும் மாமயில் நல் புண்ய மாமயிலே
பழநி - எங்கும் மாமயில் தங்கும் மாமயில் - சொல்
பொங்கும் மாமயிலே (மயி)

7. எங்கள் மாமயில் துங்க மாமயில் நல் தங்க மாமயிலே
ஸ்துதித்தேற்றும் மாமயில் சொல்லாற்றும் மாமயில்
இன்றும் மாமயிலே (மயி)

8. ரத்னகீதமுள் ரம்யமாமயில் நல் ராஜராஜ மயிலே - ரக்ஷி
ரங்கராஜர்தன் மருகன் நல்முருகோன் ரவிக மாமயிலே (மயி)

9. பஞ்சவர்ணமுள் ப்ரியமிகு மயிலே பக்ஷமாயாள் மயிலே
வா பாரமென்னசொல் வின்னேரமென்னஉன்
ஞேரமென்ன மயிலே (மயி)

10. எங்கள் பங்கிருந்தென்றும் ரக்ஷிப்பாய் ஏற்ற மாமயிலே - இன்று
முத்தமிழ் அருள் நத்தினேமுன்னை நித்யமாமயிலே (மயி)

11. அந்தியகாலம் எமன்பாலெங்களைக் காட்டாதே மயிலே
அன்று - ஆதரவாயிருந் தெங்களைக் கார்க்க
அன்புடன் வாமயிலே (மயி)

12. என்றும் நரகில் விழுகாம லெங்களைக் காப்பாய் மாமயிலே
இன்று இகபரமருள குகன் முருகன் ஸ்நேகம்
செய்து வைப்பாய் மயிலே (மயி)

13. தென்றல் குமரகுரு பரனவன் சேவை
செய்துவைப்பாய் மயிலே - ததி வந்து நித்தமுந்தன்
அன்பர்கள் பூஜை ஏற்றுக்கொள்வாய் மயிலே (மயி)

14. வள்ளி முருகன் க்ருபை கடைக்கண்
திறக்கருள் வார்ப்பாய் மாமயிலே - ஜெகம்
புகழ்திருவடி அறுமுகனவன் தரிசனம் -
பண்ணிவைப்பாய் மயிலே (மயி)

15. சரவணபவகுக - ஷண்முகனை மனம்
மறக்காதே மயிலே - ஜல்தி - சுகவரமருளித்
தரணிதனிலினி - பிறக்காதே மயிலே (மயி)

16. குறமகளொடு தினம் - மயில்மிசை நடமிடும்
குறிப்பாய் வேல் மயிலே - குண - மருள்
விதரணமுடனுடனின் பசுந்தோகை விரிப்பாய் வாமயிலே (மயி)

17. நம்பும் பக்தர்க்கருள்வோன் சுப்ரமண்யன் -
ஞானமாமயிலே - நினை - நாளும்
ஞாயமுடனடைவுடன் தொழும் ரத்னம்
தோகை மாமயிலே (மயி)

18. என்றும் எங்களுக் - கருள்வாய் முக்தியும் -
ஏர்வைமாமயிலே - இன்று - எவரினிகதி சொல் -
இனியேதோது - ஆர்வையாய் மாமயிலே (மயி)

19. கண்யமுடனருள் - காருண்யலாவண்ய
கானரத்னமயிலே - க்ருபையருள் விதரணகுண -
தீனசரண்ய வேல் - த்யான சுந்த்ரமயிலே (மயி)

20. திமிதஜெணுததரி - கிடவென நடமிடும்
திவ்யமாமயிலே - தினம் தகஜெம்தரிகிட தத்தோம்
தரிகிடவென ததியாடும் மயிலே (மயி)

21. தத்தோம் தோம்தக - தீம்தகதிமிகிடவென
நடமிடும் மயிலே - திவ்ய - தாளமேளங்கள் -
ஒலித்து நித்தம் முழங்க மங்களம் மாமயிலே (மயி)

22. நித்யசம்ப்ரம - நித்யமங்களம்சேர் -
நித்ய நீலமயிலே - நித்ய - நாதன்
வள்ளி தெய் - வானை மணாளர்க்கு -
நித்ய மங்களம் மயிலே (மயி)

திருப்புகழ்

## 26. மருவே சரித்த என்ற மெட்டு

1. முருகா வருக - மதி நீர்தருக - புகழே
பெருக் - மகிழ்வாக - இகழாபழநி - மலை
மீதில்வதி - அழகான வள்ளி - மணவாளா (முரு)

2. தருமாதூர் உடல் விடுமோ - த்ரேகம் சதமா
இது நலமாமா - குணமா இதுவும் சரியா
சொல்பத முறையா ரத்னம் - வடிவேலா (முரு)

3. மயில் மீதிலமர் - மன்னுதி மன்ன
முருகா முருக - வரவேணும் - வரமே யருள
வருவாய் முக்தியருள்வாய்
இத்தினம் - தரவேணும் (முரு)

4. குமரா குறைகளிடர்தீர் குகனுன் மலர்தாள் சரணம்
கதி நீரே - குகனே குணமுள் - திருமால் மருக - முருகா
ஷண்முக - பெருமாளே (முரு)

## 27. ராகம் சாமா — தாளம் ஆதி

பல்லவி

வேலவ வந்தருள்வாய் - வள்ளிதன் (வே)

அனுபல்லவி

பழநியுள் கந்தா - பக்தர்கள் குகனே
பரமசிவோன் மைந்தா - ப்ரிய முருகோனே (வே)

சரணம்

1. சிதர மருக . ஷண்முகவேலா சாதகஜனசுப் - ரமண்யசீலா
சுஜன சம்ரக்ஷண - ஜெகத்பரிபாலா - ஜெகமேயருள் ரத்னம்
வேல் அனுகூலா (வே)

2. தாமதமென்ன சொல் - தினமணியே நின் - திருவடி சரணம்
தன்யனே - புண்யனே - தனிப்பெருமை பூண்ட உலக
[மிதை ஆண்ட
திலக லாவண்ய ரத்னம் - தீனசரண்ய (வே)

## 28. ராகம் காகரப்ரியா — தாளம் திரிபுடை

பக்க நீலபடி என்ற மெட்டு

### பல்லவி

இக்கலியுகமிதில் - நிஜவேல் தெய்வமும்
நீரென் கந்தஸ்வாமி (இக்)

### அனுபல்லவி

எத்தலமாயினும் - வேலுன் ரூபமது
எனது ஜோதிக்கண் காணு துன்முகம் (இக்)

### சரணம்

நினக்கிதோ வந்தனம் - தரும் ரத்னம் சுந்த்ரா நல்
ஜெகமுந்தன் நாம - கீர்த்தன சேவை செய்வோர்
மனமகிழுலகினில் - மறையவர் போற்ற
மஹிமை சாயூச்சியம் பெற்று மகிழ்ந்துன் திருவடி சேர்வர்
(இக்)

## 29. நீ நாமருபமுலகு என்ற மெட்டு

ராகம் சௌராஷ்டிரம் — தாளம் ஆதி

### பல்லவி

சீமாநின் - சேவடிக்கி நித்யஜெய - மங்களம் (சீமா)

### அனுபல்லவி

1. ஸகலாத்மப்ரியபாத்ர சத்வார்த்த - வேதஸாஸ்த்ர (சீமா)
2. ஸ்ரீவேல சுஜனசீல ஸ்ரீராஜ - பஜனலோலா (சீமா)
3. மகதைஸ்வர்யம் அளிக்கும் - மகராஜ ராஜமங்கள (சீமா)
4. துதிக்கும் ரத்னுத்மபுண்ய திவ்யஸ்ரீ - சுப்ரமண்ய (சீமா)

ஸ்ரீ சுப்ரமண்யார்ப்பணம்.

ஓம் தத்ஸத்.



இப்புத்தகம் கிடைக்குமிடம்

மகா-ா-ா-ஸ்ரீ **M. S.** துரைசாமி அய்யரவர்கள்
அம்மங்குடி, ஜீயபுரம் போஸ்டு, S. I. R

★

ஆசிரியர் **G. R.** ரத்னம் அய்யர்
ஜீயபுரம், ஜீயபுரம் போஸ்டு, S. I. Ry

★

***Copies can be had of:***

**G. R. RATHNAM AIYAR,**
Jeeyapuram, Jeeyapuram Post, S. I.

★

**H. H. SRI VISHA RAJA**
**Poison King**
Ammangudi Village, Jeeyapuram Post, S

FIRST EDITION 1000 COPIES